முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | ௨௧–௮–௫௯ | வெள்ளி | ஒலி: 18

" திராவிடநாடு கேட்பது தற்கொலைக்கு ஒப்பாகும் " என்று சென்னையில் நடைபெற்ற 'நாம்—தமிழர் இயக்க மாநாட்டில் பெரியார் ஈ. வே. ரா. குறிப்பிட்டார்.

'சுதந்திர தினம்' வந்து போயிற்று!

செக்கிழுத்த சிதம்பரனாரின் தியாகத்தால் — குருதி கொட்டியும் குன்றென நின்று கொள்கை காத்த குமரனின் உறுதிப்பாட்டால் — தில்லையாடி வள்ளியம்மை போன்ற எண்ணற்றோரின் தியாக நிலத்திலே முளைத்தெழுந்த சுதந்திர மரம் தன் பனிரெண்டாவது ஆண்டிலே வளர்ந்திருக்கிறது, ஓதிய மரம் போல்!

இலாக்காக்கள் ஆர்ப்பாட்டமான புள்ளிவிபரங்களை சுதந்திர நாளன்று வெளியிட்டனர்.

இந்தப் புள்ளிவிபரங்களோ, பேருரைகளோ பொதுமக்களுக்கும் திருப்தியளித்துவிட முடியாது, அவர்களின் வாழ்வு, இடிவிழுந்த சுவராய் — இற்றுவிழும் மரமாய் — இழிந்த நிலையிலே இருக்கும்போது!

செங்கோட்டையில் நேரு பிரான் "நாம் எவ்வளவோ முயன்றும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை."--என்று புலம்பினார்.

அத்தோடு விட்டாரா? 'விலைவாசி ஏற்றத்திற்கு ஒரு சிலரே காரணம்' — என்ற மகத்தான உண்மையை—யாரும் இதுவரை கூறாத உண்மையைக் கண்டுபிடித்து கூறுகிறார்.

அதிகாரத்தைக் கையிலேந்தியிருக்கிற இவர் கூறுகிறார், ஒரு சிலர்தான் மக்களை வாட்டும் விலைவாசியேற்றத்திற்குக் காரணம் என்று!

ஒரு சிலர்தான் கோடிக்கணக்கான பேரின் அவல வாழ்விற்குக் காரணகர்த்தர்கள் என்றால் அவர்களைக் காராக்கிரகம் இதுவரை விழுங்காதது ஏன்? கடுங்காவல் தண்டனைகளுக்கு அவர்கள் ஆளாகாதது ஏன்? கறுப்புள்ளம் கொண்ட அவர்களின் பெயர்கள் சமுதாயப் பேரேட்டிலிருந்து அழித்தெறியப்படாமல் இருப்பது ஏன்?

இதற்கு நேரு தரும் பதில் மௌனம்; இயலாமையைக் காட்டும் மௌனம்; ஆட்சி நடத்தக் கையாலாகாத தன்மையைப் படம்பிடித்துக் காட்டும் மௌனம்!

"இல்லை — இல்லை—நாங்கள் ஆளும் திறமை படைத்தவர்கள்தான்" என்று கூறினால், தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தலைநிமிர்ந்து உலா வருவதேன்? ஆளும் திறமையிருந்தும் அவர்கள் திரிகிறார்கள் என்றால் அவர்களின் கைக்கூலிகள்தான் — கஷ்டவாழ்வு நடத்துவோரின் பரம வைரிகள்தான், இந்த நாடாள்வோர் — என்றுதானே பொருள்?

இப்படி ஒன்றிருக்க ஒன்றைக் கூறி அகப்பட்டுக் கொள்ளாத நிலையிலிருந்து பேசியிருக்கிறார் இன்னொரு ஆட்சி பீடத் தலைவர்! அவருடைய பதவி இப்படித் 'துன்பகரமான பிரச்சினைகளில்' இறங்க அனுமதிக்காத பதவி!

ஆம்; ஜனாதிபதிப் பதவியை அலங்கரிக்கும் ராஜேந்திரப் பிரசாத்தும் சுதந்திர தினச் செய்தியை மக்களுக்கு அளித்திருக்கிறார்:

"உங்கள் எல்லோருக்கும் நல்ல அதிர்ஷ்டமும் (?) மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன்."

'மந்திரங்களில் — முணுமுணுக்கும் கோஷங்களில் பயனில்லை; மக்களே! உற்பத்தியைப் பெருக்குங்கள்; உங்கள் கையை நம்புங்கள்'—என்று கூறிவரும் அரசாங்கத்தின் மூலவர்தான், அதிர்ஷ்டம் நமக்குக் கிட்ட வேண்டுமென நினைக்கிறார். வாழ்வில் உயர்வடைந்த முட்டாளும், சோம்பேறியும் சரணடைகிற அதிர்ஷ்டம் நமக்குக் கிடைக்க

பசி, பிணி இல்லா நாடா, இது? பசியெடுத்த புலி உலவும் காடு!

நிழல் தரும் என்று நினைத்து நட்ட அந்த மரம், பனிரெண்டு ஆண்டுகளில் நச்சு மரமாக மாறியிருக்கும் பயங்கர நிலையைக் காணுகிறோம்.

வாய் இனிக்க, வயிற்றை நிரப்பிடும் கனிகளைத் தரும் என நம்பியவர்களின் எண்ணத்திலே தீயள்ளிப் போட்டுவிட்டு உதடுகளைக் கருக்கி, வயிற்றைக் கலக்கும் 'விஷக் கனிகளை' கொத்துக் கொத்தாகத் தந்திருக்கிறது.

காங்கிரஸ்தான் தீங்குகளின் உறைவிடம்; தீயோரின் கூடாரம் —என்றால், அது அமர்ந்திருக்கும் ஆட்சிப்பீடம் அலட்சிய புத்திக்காரர்களின் கூடமாக— ஆணவம் கொண்டவர்களின் கொட்டிலாகக் காட்சியளிக்கிறது!

ஏழைகளின் இரத்தத்திலும் வியர்வையிலும் குளித்து, மூழ்கி, ஜலக்கிரீடை செய்துவரும் அவர்கள் மக்களுக்கு உபதேசம் புரியும் நித்திய கடமையை மாத்திரம் என்றும் மறப்பதில்லை.

சரச சல்லாபிகளுடன், சிருங்காரப் பண்பாடி, ஆடி, முடிந்தபின் 'பெண் பே'யைப் பற்றி விளக்கமுரைக்கிற சாமியார்கள் பணியை அரசியலில் ஏற்று நடத்தும் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள், காங்கிரசார்.

உபதேசம் செய்வதிலும் இந்த சுதந்திர நாளில்தான் அவர்கள் குரல் உயர்ந்திருக்கும். ஜனநாயக ஆரணங்கின் குரல்வளையை 'நறநற'வெனக் கடித்ததால் இரத்தம் சொட்டுகின்ற அதே வாயால்தான் ஜனநாயகத்திற்கு விளக்கம் தருவார்கள்.

பாவங்களைக் கணக்கெடுத்து அதில் ஒன்றைக்கூட தப்பித் தவறி விட்டு விடாமல் அடுக்கடுக்காக அப்பாவங்களைச் செய்துவிட்டு, சுதந்திர நாளில் மட்டும் செங்கோட்டை மீது நின்று ஒழுக்கத்தையும் சீலத்தையும் மக்கள் கைக்கொள்ள வேண்டுமென்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசுவார்கள்.

இந்த அரசியல் சாமியார்களின் 'உபதேசப்படலம்' இந்த ஆண்டும் நிறைவேறியது!

சாம்ராஜ்யங்களின் சுடுகாட்டு பூமியான டில்லியிலே பண்டிதர் பேசினார்; காமராசர் இங்கு ஆகாஷ்வாணியில் பண்டிதரின் குரலைப் பிரதிபலித்தார்.

அவர்களைத் தவிர டில்லி ராஜபவனத்துக் கொலு பொம்மையாய்—ராஜ விக்ரகமாய் இருக்கிற ராஜன் பாபும் பேசியிருக்கிறார்!

இவர்களுக்கெல்லாம் ஆதரவாய் அரசினரின் பல்வேறு டுப்படுத்த முடியவில்லை."--என்று புலம்பினார்.

ஆனால், நாட்டு மக்களுக்குத் தெரியும், விலைவாசியை ஏன் இந்த அரசாங்கத்தினரால் கட்டுப்படுத்த முடியவில்லை--என்பது! தனிப்பட்ட பெரும் முதலாளிகளின் தயவை எதிர்பார்த்து நிற்கும்வரை—தேர்தலில் ஏழைகளின் கையிலே திணிக்க கரன்சி நோட்டுகள் தேவைப்படும்வரை —உதவாக்கரைத் திட்டங்களை நிறைவேற்றிட கடன் பத்திரங்களை முதலாளிகளின் கனிந்த பார்வைக்கு அனுப்பும்வரை விலைவாசியை இந்த ஆட்சித் தலைவர்களால் நிலை நிறுத்தமுடியாது —என்பதைப் பொதுமக்கள் உணர்ந்திருக்கிறார்கள். பணம் கொடுத்தவன் ஆதிக்கம் செலுத்தாமலா விடுவான், ஆட்சி நிர்வாகத்திலே? தம்மை நோக்கி வருகின்ற சட்டம் எனும் கணைகளின் கூரான பகுதியை உடைத்தெறிவதில் மட்டும் கவனம் செலுத்தமாட்டான் காங்கிரசுக்கு உதவி செய்யும் முதலாளி! அக்கணையை எறியும் வில்லின் நாணையே அவிழ்த்துவிடும் பணியிலேதான் ஈடுபடுவான்!

விலைவாசிகளின் உயர்வில் தன் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளும் முதலாளிகளை மடியின்மீது வைத்துக்கொண்டே விலைவாசி உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதாக நேரு கூறுகிறார்; கூறுவதோடு அவர் நின்றுவிடுவதில்லை; அந்தக் கூற்றை மக்கள் நம்ப வேண்டுமென்பதற்காக உணர்ச்சியான பேச்சு எனும் தேனைக் கொஞ்சம் சேர்த்திருக்கிறார்.

வேண்டுமென டாக்டர் பட்டம் பெற்ற பிரசாத் கூறுகிறார்!

'அயர்வை விரட்டி, வியர்வையை வழித்தெறிந்து விட்டுப் பாடுபடுவீர்; பலன் இந்தப் பகல் இல்லையாயின் அடுத்த பகலாவது கிடைக்கும்; தெய்வத்தால் முடியாதென்றாலும் மெய் வருந்தப் பாடுபடும் உங்களுக்கு அதற்குத் தகுந்த பலன் கிடைக்கும்!'—என்று உற்சாக மொழி கூறிட வேண்டிய தலைவர், அந்தோ — அதிர்ஷ்டத்தைச் சரணடைந்துவிட்டார்!

ஆட்சியில் தவறுகள் நிகழ்கின்றனவே — எனக் குறை கூறுவோருக்குப் பதில் கூறுமுகத்தான் அழகான பதிலை— அரசியல் வாதி எவரும் கூறத் தயங்கும் கருத்தை வெளியிட்டிருக்கிறார்:

"........ஒரு சில இடங்களில் தவறுகள்கூட ஏற்படலாம்....... ஆனால், அந்தத் தவறுகளின் மூலம் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகின்ற பெரிய மனதும், விவேகமும் நமக்கு ஏற்பட வேண்டும்!"

தவறுகளின் மூலம் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் பெரிய மனது ஏற்படவேண்டுமாம்!

ஆட்சிபீடத்திலே அமர்ந்திருப்போர் செய்கிற தவறுகள், யாரோ ஒருவரைப் பாதிக்கும் தவறல்ல; சில்லறைக் காசுகளை விழுங்கிவிடும் தவறல்ல!

கோடிக்கணக்கானவர்களின் வாழ்க்கைப் பாதையைத் திருப்பிடும் சக்தி பெற்றவை; கோடிக்கணக்கான ரூபாய்களை இருந்த இடம் தெரியாது மறைத்துவிடும் ஆற்றல் பெற்றவை—என்பதை அறிந்தேதான் மழுப்புகிறார், ஆட்சித் தலைவர்.

அத்தகு வீண் விரயங்களை உண்டாக்கிவிட்டுத்தான் — கோடிக் கணக்கானவர்களின் இரத்தத்தையும், வியர்வையும் வீணாக்கி விட்டுத்தான் பெரிய மனதையும், விவேகத்தையும் பெற அறிவுரை சொல்கிறார்!

லட்சக்கணக்கான ரூபாய்கள் தருகின்ற இன்பத்தைச் சுவைத்துக் கொண்டு, 'குளு குளு' வாசம், கோலாகலப் பவனி, கோமான்களின் சகவாசத்திலிருக்கும் டில்லி ராஜபவனத்து 'சுகவாசி'யிடமிருந்து வேறெந்த உபதேசம் வரும், இந்த நாட்டு மக்களுக்கு?

மேற்கூறிய இரண்டு மூல பீடத்துத் தலைவர்களைப் பின்பற்

[தொடர்ச்சி பக்கம்—10]

தமிழ் நாட்டின் ஒவ்வொரு பெண்ணும் தவறாது படிக்க வேண்டிய நூல்!

மா. கி. தசரதன் எழுதிய

மனங்கவர் குடும்பக் கதை.

கதாநாயகியின் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் நெருப்பாகி நீதி கொன்றவர்களின் எண்ணங்களை நீறாக்கும் புதிய இலக்கியம்!

தணலில் தங்கம்

விற்பனை உரிமை:

தென்றல், சென்னை-

தனிப் பிரதி ரூ. 1—50. தபால் செலவுடன் ரூ. 1—60.
விற்பனையாளருக்குக் கழிவு 25 சதவீதம்.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

வெள்ளி ௨௧—௮—௫௯ சென்னை

வரலாறு முடியவில்லை!

வீழ்த்தப்பட்ட பிணங்களை எண்ணி முடித்துவிட்டார்கள். வஞ்சகர் விரித்திட்ட வலைதனிலே தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டவர்களின் சுற்றத்தார் விட்ட கண்ணீர் வற்றிவிட்டது. படிக்கச்சென்ற பாலகர்கள், பாய்மரமற்ற மரக்கலம்போல் பரிதவித்த நிகழ்ச்சிகள் மறந்துபோயின. தாலியறுந்த தாய்க்குலத்தின் சோகப் புலம்பல் தேய்ந்து மறைந்து அழிந்துவிட்டது!

ஆமாம்; கேரளக் குழப்பம் 'சுமுகமாக' முடிந்துவிட்டதாம்; இப்படி எண்ணிப் பூரிக்கிறது டேல்லி!

இரத்தத்தை நீராக்கி, சதைத்துண்டங்களையும், எலும்புகளையும் அழகாக அடுக்கி கட்டிமுடிக்கப்பட்ட சமாதிக்கு 'ஜனாதிபதி ஆட்சி' என்ற நாமகரணத்தைச் சூட்டிவிட்டார்கள். தன்னுடைய ஏகாதிபத்திய வெறிபிடித்த பாதத்தின் அடியிலே ஜனநாயகச் சிசுவை மிதித்து நசுக்கி அழித்துவிட்டார், இந்த நாட்டின் குடியரசுத் தலைவர்.

மக்கள் மன்றம் 'உப்பில்லாப் பண்டம்' என்று காறி உமிழ்ந்து தூக்கி எறிந்தாலும்கூட—ஆட்சிப் பொறுப்பில் அங்கம் வகிக்கவும்; அலங்கோலத்திற்கு வித்திடவும் கற்றவர் நாங்களே என்று மார் தட்டும் காங்கிரசாரின் 'மாயா ஜாலம்' வெற்றி அடைந்துவிட்டது! பதவி வெறி பிடித்து சுற்றியலையும் கண்களுக்கு முன்னால், எதைக் கண்டாலும் எடுத்தெறிந்து நடக்க—அவசியமானால் வெட்டி வீழ்த்தி வேக நடைபோடத் துணிந்தவர்கள் தாங்கள்தான் என்பதை இந்திய உபகண்டத்தின் தென் கோடியிலே நிரூபித்துக் காட்டிவிட்டார்கள், காங்கிரசார்!

முடிவில்லாத் தொடர்காவியமாக வளர்ந்து வந்த அந்த வேதனை வரலாறு விசித்திரமான கட்டத்தில் 'முற்றும்' என்ற முத்திரையைப் பெற்றுவிட்டது.

மக்கள் மன்றம் மாலையிட்டு வரவேற்ற மாற்றுக்கட்சி ஆட்சியின் கண்களிலே மண்ணைத் தூவி குழியிலே தள்ளும் காங்கிரஸ் இயக்கத்தின் கோணல் பயணத்தை வெறுத்தவர்களுக்கோ, அந்த முடிவு, அக்கிரமத்தின் இலக்கணத்தை எடுத்துக் காட்டுகின்ற 'அவல முடி'வாக இருக்கிறது!

ஆனால், சிலையான காந்தியாரின் பெயரால்—பேசும் திறனற்ற ஜனநாயகத்தின் பெயரால் சுகித்து ஆலவட்டம் சுற்றுகின்றவர்களின் அடிதாங்கிகளுக்கோ மலர் மழை பொழியும் 'மகிழ்ச்சி முடி'வாக அது தோன்றுகிறது!

இனி என்னவானால் என்ன; ஒரு வரலாறு முடிந்து விட்டது—இப்படி எண்ணிப் பெருமூச்சுவிடுவோருக்குப் புதிய செய்தி ஒன்று இப்போது கிடைத்திருக்கிறது!

வரலாறு முடியவில்லை; அடுத்த பாகத்தின் முதல் அத்தியாயத்தை எழுத ஆரம்பித்துவிட்டார்கள்!

துரோகம் வென்று விட்டது என்று துந்துபி முழங்கினார்கள்; மீண்டுமொரு சோதனையான கட்டம் இப்போது நெருங்கி வருகிறது!

கேரளத்தில் 'ராஜிநாமா செய்யவேண்டும், கம்யூனிஸ்ட் சர்க்கார்' என்று குரல் எழும்பியது; குரலுக்குப் பின்னால் கூலிப்பட்டாளம் அணிவகுத்தது; இறுதியில் வலுக்கட்டாயமாக அரியணை பறிக்கப்பட்டது! 'மக்களின் குரலுக்கு மதிப்பளித்தோம்' என்று திரை போட்டனர், அந்தத் தீச்செயலுக்கு!

இந்தக் கொடுமை நிகழ்ந்து பதினைந்து தினங்கள் முடியவில்லை; மீண்டும் ஒரு குரல் எழும்புகிறது, 'சர்க்கார் ராஜிநாமா செய்யவேண்டும்' என்று!

கேரளத்திலிருந்தல்ல; உத்தரப் பிரதேசத்திலிருந்து!

உத்தரப் பிரதேச மந்திரிசபை மீதும், அதன் முதல்வர் சம்பூர்ணனந்த் மீதும் குவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் கொஞ்சநஞ்சமல்ல. அந்த நாணயமற்ற அரசு, நாட்டுமக்களின் உதிரத்தை வரியாகப் பறித்து, அதை ஊதாரித்தனம் என்ற விழலுக்கு இறைத்து வருகின்ற கொடுமையைக் கண்டித்து இன்றுமட்டும் எதிர்ப்புக்கிளப்பவில்லை. நீண்ட கால வெறுப்புக் குரல் இன்று புது உரு எடுத்திருக்கிறது.

உத்தரப் பிரதேச மந்திரிசபை ஊதாரித்தனத்தின் உச்சிக்கே சென்றுவிட்டது என்பதோடு மட்டுமல்ல; ஊழலின் பிறப்பிடமாக மாறிவிட்டது என்பதோடு மட்டுமல்ல; லஞ்சத்திற்கு 'ஆரத்தி' எடுத்து வரவேற்கும் தீச்செயலிலும் முன்னோடியாக விளங்குகிறது! உள்துறை அமைச்சர் கமலாபதி திருபாதி என்பவர்மீது எண்ணற்ற லஞ்சக் குற்றங்கள் சுமத்தப்பட்டன.

பலன் என்ன? குற்றச்சாட்டுகள் அனைத்தும் குப்பைக் கூடையிலே கிழித்து எறியப்பட்டுவிட்டன. மக்களின் பிரதிநிதிகளாம் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோள்கள் அனைத்தும் தூக்கி எறியப்பட்டுவிட்டன!

இந்த விளைவுகளின் எல்லையாகத்தான் "உத்தரப் பிரதேச மந்திரிசபை ராஜினாமா செய்யவேண்டும்" என்ற கூக்குரலை இன்றைய தினம் எழுப்பியிருக்கின்றன, எதிர்க்கட்சிகள்! இதில் மற்றுமொரு வியக்கத்தக்க உண்மை என்னவெனில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல; ஆளுகிற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களில் 103 பேர்கள் அந்த அமைச்சரவை ராஜினாமா செய்யத்தான் வேண்டும்—என்று கோரிக்கை கிளப்பியிருக்கிறார்கள்.

மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் வந்த நேரத்தில் அந்தச் சபையை ஆதரித்து ஓட்டளித்தவர்கள் 187 பேர்தான்; 426 உறுப்பினர்களில் 187 பேரே ஆதரித்த அந்தச் சபை மக்களுடைய செல்வாக்கைப் பெற்றிருக்கிறது என்று பொருள்? அரியணை ஏறிய காலம் முதல், இன்றுவரை அலங்கோலங்களை எண்ணிக்கையற்று உற்பத்தி செய்த ஒரு ஆட்சி நீக்கப்பட வேண்டும் என்று கேட்பதிலே தவறு இருப்பதாகவா கருத முடியும்?

> "மாநிலம் முழுவதிலும் பாதுகாப்பின்மை உணர்ச்சி மிகுதியாகிவிட்டது; சட்டமும் ஒழுங்கும் குலைந்துவிட்டது; ஊழல் கோர நர்த்தனம் புரிகிறது; மோசமான நிர்வாகத்தால் நாசம் தலைதூக்கிவிட்டது; இந்த இழிநிலையைப் போக்க—மக்களின்சிரித்த முகம் நோக்க சக்தியற்றுவிட்டது இன்றைய அரசு! அது பதவி விலகி, அடுத்த தேர்தலுக்கு வழி வகுக்க வேண்டும்!"

— இந்தக் கோரிக்கையை மாநில கவர்னர் வி. வி. கிரியிடம் மற்ற எதிர்க்கட்சிகள் தந்திருக்கின்றன!

முடிவு என்னவாகும்? உத்தரப் பிரதேசத்தை உன்னிப்பாகக் கவனிக்கத் துவங்கிவிட்ட அரசியல் விமர்சகர்கள் இந்த வினாவுக்கு விடை தேடுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

கேரளத்திலும் இப்படித்தான் கவர்னர் ராமகிருஷ்ணராவிடம் கோரிக்கை தந்தார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அதை விளக்கி, 5000 வார்த்தைகள் கொண்ட தனி அறிக்கை ஒன்றைத் தயாரித்து டெல்லிக்கு அனுப்பினார் கவர்னர்! விளைவு...? கம்யூனிஸ்ட் மந்திரி சபை கவிழ்க்கப்பட்டது.

ராமகிருஷ்ணராவ் செய்த அந்தத் 'திருப்பணி'யை இப்போது கிரியும் செய்வாரா?

காங்கிரஸ் தலைமைப்பீடத்திலே அரசியல் நேர்மை சுகேளவாவது இருக்குமேயானால் நடக்க வேண்டியது என்ன?

பெருவாரியான உறுப்பினர்களின் வெறுப்பை சம்பாதித்து, 'விலகத்தான் வேண்டும்' என்ற சீற்றத்தையும் கேட்டபின் என்ன நடக்க வேண்டும்?

உத்தரப் பிரதேச மந்திரிசபையைக் கலைத்துவிடத்தான் வேண்டும்!

'சோகக் கதை' இன்னும் முடியவில்லை என்று நம்புகிறவர்கள் இந்த முடிவைத்தான் எதிர்பார்க்கிறார்கள். ஃ

திருமண அழைப்பு

அன்புடையீர்! ★

வணக்கம். நிகழும் திருவள்ளுவராண்டு 1990 ஆவணித் திங்கள் 10-ம் நாள் (26—8—59) புதன்கிழமை மாலை 5 மணி அளவில், எனது இளவல் செல்வன் இரா. செழியனுக்கும் — சென்னை அரசு சம்பளம்-கணக்குத் துணை அலுவலாளர் திரு என். சண்முகசுந்தரம் அவர்களின் மகள் செல்வி ச. பிரேமாவிற்கும் சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலை 495-ம் எண் "ஆலத்தூர் வில்லாவில்" அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பிக்கவேண்டுகிறேன்.

சென்னை
10—8—59

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்

அன்புள்ள மாதவி,

லூயி, எலிசபெத் போன்ற பலமுள்ள மன்னர்கள், வேறு ஐரோப்பிய நாடுகளிலும் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் ரஷ்யாவை ஆண்ட பீட்டரும், பிரஷ்யாவை (இப்பொழுதுள்ள ஜெர்மனியின் ஒரு பாகம்) ஆண்ட ஃப்ரடரிக்கும் ஆவார்கள். லூயி மன்னனுடைய ஆட்சி பிரஞ்சு நாட்டில் உச்சக் கட்டத்தில் இருந்தபொழுது ரஷ்யாவில் பீட்டர் மன்னனுடைய ஆட்சி ஆரம்பமாகி இருந்தது. மங்கோலியர்களுடன் ஏற்பட்ட நீண்ட காலத் தொடர்பால், கிழக்கத்திய நாகரிகத்தை — ஆசிய நாகரிகத்தைப் பெற்றிருந்த ரஷ்யாவை, ஐரோப்பிய நாகரிகத்தைத் தழுவச் செய்து, அந்நாட்டை நவீன வழக்கப்படி ஒரு நாடாக உருவாக்கியவன் வரலாற்றில் 'மகா' என்ற பட்டத்தைப் பெற்ற பீட்டர் மன்னன் தான்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

49. ரஷ்யாவை உருவாக்கிய பீட்டர்

இளமையிலேயே அரசுரிமை காரணமாக நாடு கடத்தப்பட்ட அவன், பொழுதைப் பொன்னே போல் போற்றி, கப்பல் கட்டுவதிலும் மாலுமியாவதிலும் பெரும் அக்கறை காட்டி நல்ல பயிற்சியும் பெற்றான். இப்படி பீட்டர் பெற்ற பயிற்சி, அவன் மன்னனான பிறகு, ரஷ்யாவுக்கான கப்பற்படை யொன்றைக் கட்டவும் கடலாதிக்கம் பெறவும் பெருந்துணையாக இருந்தது. பீட்டர் மன்னனான பிறகு, ரஷ்ய நாட்டை கடல் வலிமை பெற்ற நாடாக்க விரும்பினான். ரஷ்ய நாட்டுக்கு வசதியான துறைமுகம் ஏதும் இல்லாத குறையை உணர்ந்தான். வடக்கே இருந்த ஆர்ட்டிக் கடலோ, ஆண்டில் ஆறுமாத காலம் பனிப் பாறைகளாக உறைந்து கிடந்தது. பால்டிக் கடலோரம் ஸ்வீடிஷ் மக்களின் வசப்பட்டிருந்தது. தெற்கே கருங்கடல் பகுதிகள் துருக்கியர்களின் ஆதிக்கத்தில் இருந்தன. துருக்கியர்களின் ஆதிக்கத்தை முறயடிக்க பீட்டர் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. ஆகவே வடக்கேயிருந்த ஸ்வீடிஷ்காரர்களின் பக்கம் தன் கவனத்தைச் செலுத்தி, அவர்களை வென்று பால்டிக் கடற்கரைப் பிரதேசத்தைக் கைப்பற்றினான். பிறகு அங்கே தனனுடைய பெயரால் பீட்டர்ஸ்பர்க் என்ற துறைமுக நகரமொன்றை நிறுவி, ரஷ்யாவின் தலைநகரை மாஸ்கோவிலிருந்து பீட்டர்ஸ்பர்க்கிற்கு மாற்றினான். லூயி மன்னனின் அதிகாரப் பெருமையும், கட்டிட சாதனைகளையும் கண்ட பீட்டர், பாரிஸ் நகர் அருகே லூயி மன்னன் நிர்மாணித்த கலையழகு நிரம்பிய வெர்சேல்ஸ் மாளிகை போலவே, பீட்டர்ஸ்பர்க் அருகே பீட்டர்ஹாஃப் என்ற வேலைப்பாடுகள் நிரம்பிய அரண்மனையைக் கட்டி முடித்தான். அப்பொழுது பீட்டர்ஸ்பர்க் என அழைக்கப்பட்ட நகரம்தான் பிறகு பெட்ரோகிராட் ஆகி, அதன் பிறகு லெனின்கிராட் என்று பெயரிடப்பட்டு, இப்பொழுதும் அந்தப் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகிறது என்பதையும் நீ நினைவுபடுத்திக் கொள். பீட்டர்ஸ்பர்க் ரஷ்யாவின் தலைநகரம் ஆக்கப்பட்டதால், ரஷ்யாவின் கப்பற் படை பெருகி, கடலாதிக்கம் வளர்ந்து, வியாபாரமும் செழித்தது. டச்சுக்காரர்களிடமிருந்தும் ஆங்கிலேயர்களிடமிருந்தும் கப்பல் கட்டும் தொழிலை பீட்டர் கற்றுக் கொண்டான். அதற்காகத்தான் அரசன் என்று தெரியாமல் மாறு வேடம் பூண்டு, லெஃபோர்ட் என்ற தன் நண்பன் ஒருவன் தலைமையில் தூதுக்குழு ஒன்றை ஏற்படுத்தி அதில் தன்னை ஒரு சாதாரண உறுப்பினனாக ஆக்கிக் கொண்டு, ஹாலந்து இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குப் போய் கப்பல் கட்டும் கலையைப் பயின்று ரஷ்யா திரும்பினான். சிறு வேலையானாலும் பெரிய வேலையானாலும் அதை சிறப்பாகச் செய்து முடிப்பதே பீட்டரின் பழக்கம். தன்னைவிட ஒரு துறையில் ஆற்றல் மிக்கவர்களைக் கண்டால் அவர்களிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்து அவர்களுக்குக் கீழேயிருந்து பணியாற்றும் நல்ல உயரிய பண்பு பீட்டரிடம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது

ரஷ்ய மக்களின் பிற்போக்குத் தன்மையை மாற்ற பீட்டர் பெரு முயற்சி எடுத்துக் கொண்டான். ஐரோப்பிய நாகரிக வழியில் ரஷ்ய மக்களும் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென எண்ணினான். நடை, உடை, பாவனை ஆகிய எல்லாவற்றிலும் ஐரோப்பிய மோகம் கொண்டிருந்தான் பீட்டர். கட்டிடக் கலையில் பிரஞ்சு நாட்டை வழிகாட்டியாகக் கொண்டிருந்த பீட்டர் பிரஞ்சு கட்டிடக் கலைஞர்களைக் கொண்டு ரஷ்ய நகரங்களின் முக்கியமான கட்டிடங்களைக் கட்டச் செய்தான். தன்னுடைய நாட்டு மக்கள் தாடி வளர்க்கின்ற பழக்கம் கொண்டோராக இருப்பதை அறவே வெறுத்தான். அதிலும் தன் அரண்மனையில் வாழும் பிரபுக்கள் தாடி வைத்திருப்பதை அவன் கொஞ்சமும் விரும்பவில்லை. ஒரு நாள் அரசவைப் பிரபுக்களையெல்லாம் ஒரு சேர அழைத்து, அவர்களுடைய தாடியை எல்லாம் தானே கத்தரித்து நீக்கி, இனி அவர்கள் தாடி வளர்க்கக் கூடாது என்று உத்திரவும் இட்டான். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தாடி வளர்ப்பவர்களிடமெல்லாம், அவர்களுடைய தாடியின் நீளத்திற்கேற்ப வரி விதித்து வசூலிக்கப்பட்டது என்றால், பீட்டரின் நாகரிக மோகத்தை என்னவென்று சொல்லுவது? தன்னுடைய பிரபுக்களெல்லாம் பிரஞ்சு பாணியிலேயே உடை உடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பீட்டர் உத்திரவிட்டான்.

ஆடம்பரத்தைப் பீட்டர் வளர்த்தானே தவிர அவன் ஆடம்பரமாக வாழ்ந்தான் என்று சொல்ல முடியாது. எப்பொழுதும் அவன் ஆபாசமாகவே உடை உடுத்தியிருந்தான். ஆறு அடி எட்டு அங்குல உயரமும் நல்ல கறுமையான நிறமுமுடைய பீட்டர், வசீகரமாக இல்லாவிட்டாலும் கம்பீரமான தோற்றமுடையவனாக இருந்தான். சிறு வயதிலேயே தன் தாய் கொடுமையாகக் கொல்லப்பட்டதைக் கண்ணெதிரிலேயே கண்டவன். குடியும் கூத்தி மோகமும் அவனிடம் நிரம்ப இருந்தன. சட்டப்படி திருமணம் செய்துகொண்ட மனைவி எடோக்கியாவை விலக்கி வைத்துவிட்டு காதரைன் என்ற அழகற்ற ஒருத்தியைத் தன் காமக்கிழத்தியாக வைத்திருந்தான்! எடோக்கியா கன்னி மாடத்தை அடைந்து கண்ணீரும் கம்பலையுமாகக் காலந்தள்ளி முடிவில் மரணமடைந்தாள். அவளுக்கும் பீட்டருக்கும் பிறந்த மகன் சதிகாரன் எனக் குற்றம் சாட்டப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகி மாண்டு போனான். காதரைனோடு உல்லாச வாழ்வு நடத்திய பீட்டர், அவளையே திருமணமும் செய்து கொண்டான். பீட்டரிடம் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கினாள் காதரைன். அவளுடைய உண்மையான பெயர் காதரைன் அல்ல; அவளுக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்பதே வரலாற்றில் புரியாத புதிராக இருந்து வருகிறது. கடைசியில் காதரைன் அரண்மனை அலுவலாளன் ஒருவனோடு கள்ளக் காதல் கொண்டிருப்பதாக சந்தேகப்பட்ட பீட்டர், அந்த அலுவலாளனைக் கைது செய்து, பொய்க் குற்றங்கள் பல சாட்டி மரண தண்டனை விதித்தான். வெட்டப்பட்ட அவனுடைய தலையைக் கையிலே வைத்துக் கொண்டு, வஞ்சம் தீர்த்துவிட்டதாகக் கூறி, உரத்துச் சிரித்துத் தன் ஆத்திரத்தை பீட்டர் தீர்த்துக் கொண்டானாம். பிறகு அவனுடைய தலையை ஈட்டியிலே குத்தி நட்டு வைத்து காதரைனையும் உடன் அழைத்துக் கொண்டு, அதைச் சுற்றி வண்டியில் ஊர்வலம் வந்தானாம். மரணமடைந்துவிட்ட தன் கள்ளக் காதலனுக்காக காதரைன் வருத்தப்படுகிறாளா என ஊர்வலத்தின்போது அவள் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தானாம். ஆனால், சாமர்த்தியசாலியான காதரைன் எவ்வித சலனத்தையும் முகத்திலே காட்டாமல் அமைதியாக இருந்தாளாம்! அதற்குப் பிறகு, பொதுவிடங்களில் தவிர, காதரைனிடம் பீட்டர் பேசவே இல்லை என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். காதரைனின் வாழ்க்கையைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமிக்க வேண்டிய நிலையிலிருந்தான், பரிதாபத்துக்குரிய பீட்டர்!

என்ன குறைகளிலிருந்தாலும், ரஷ்யாவை நாடாக உருவாக்கி, சக்தி பெற்றதாகச் செய்தவன் மாமன்னன பீட்டர். பள்ளிகள், காட்சிசாலைகள், தொழிற்சாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றை நிறையக் கட்டினான் ரஷ்ய நாட்டை நாகரிகப்படுத்தி, அந்நாட்டின் கொடியை உயரப் பறக்கச் செய்த பீட்டர் 1725-ம் ஆண்டு மாண்டு போனான். அவனுடைய செயல்களால் அரசாங்க கஜானா காலியாயிற்று. அவன் இறந்தபொழுது எந்த விதமான வாரிசுரிமைச் சாசனமும் விட்டுச் செல்லவில்லை. நாட்டின் பலத்தை வளர்த்த பீட்டர், தனக்குப் பின் தன் சாதனைகளைக் கட்டிக் காப்பவரைப் பற்றிக் கவலைப்படாமல் போனது விந்தையே!

பீட்டர் பேராசை பிடித்தவனல்ல; சுயநலம் ஏதும் அவனிடமில்லை. சேவை மனப்பான்மையுடனே வாழ்ந்தான். நல்லனவும் அல்லனவும் நாடு வாழவே செய்த தேசபக்தன் அவன்!

அன்புள்ள,

அகத்தியன்.

அந்தோ பரிதாபம்!

'உப்பென்றும் சீனியென்றும்
உள்நாட்டுச் சேலையென்றும்
செப்பித்திரிவாரடீ—கிளியே!
செய்தவறியாரடி!'

—உப்புக்கும், சர்க்கரைக்கும், உடைக்கும் ஒரு பொருளாதாரத் தத்துவத்தை-'காந்தியப் பொருளாதாரத் தத்துவ'த்தைக் கொண்ட காங்கிரஸ்காரர்களைத்தான் கவி பாரதியார் கேலி செய்திருக்கிறார். அவரது கேலி இன்னும் பொய்க்கவில்லை என்பதைத்தான் அண்மையில் பேசிய ஏ. பி. ஜெயின் எனும் டில்லி அமைச்சரின் பேச்சு நிருபிக்கிறது:—

'சர்க்கரையின் விலையைக் கட்டுப்படுத்த நாங்கள் எவ்வளவோ முயற்சிக்கிறோம்; என்றாலும் விலை சமீப காலத்தில் மிக அதிகமாகவே ஏறியிருக்கிறது.'

* இயலாமையைத் தெரிவிக்கிறார் அந்த அமைச்சர்!
* இவர்களுக்கென்று ஒரு 'தத்துவம்'!
* இவர்களுக்கென்று அதிகாரங்கள்!
* இவர்களுக்கென்று ஆட்பெரும்படை!
* இத்தனை இருந்துமென்ன; சர்க்கரை விலையைக்கூட இவர்களால் குறைக்க முடியவில்லை!

அறுந்தது ஆணிவேர்; ‘ஆபட்ஸ்பரி’ மாநாட்டில்!

ஆபட்ஸ்பரி பங்களாவில் மாநாடு!

ஆம்; நாம்-தமிழர் இயக்கத்தின் மாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அலங்காரத் தோரணங்கள்; வரவேற்பு வளைவுகள்; இரவில் பங்களாவின் மரங்களில் தொங்கிய விளக்கு வரிசைகள் கண்களைப் பறித்தன.

நான்கு மொழியினரின் திராவிடக் கூட்டாட்சியை மறைமுகமாக எதிர்க்கும் நாம்-தமிழர் இயக்க மாநாட்டில் திராவிடக் கழக கறுப்புச் சட்டைக்காரர்களே அதிகம் தென்பட்டனர். இது ‘கறுப்பு சட்டை மாநாடோ’ என மக்கள் குழம்பினர்.

நுழைவு வாயிலில்—துவக்கத்தில் மட்டுமே இக்குழப்பம் இருந்துவிடவில்லை. தொடர்ந்திருந்தது! குழப்பத்தின் உச்சகட்டம் இரவு 8 மணிக்குமேல் தான் ஆரம்பமாகியது!

ஆம்; பெரியார் பேச ஆரம்பித்தது. இரவு 8மணிக்குத்தான்! காலையிலிருந்து சொற்பொழிவுகளைக்கேட்டவர்களின் தலைசுற்ற ஆரம்பித்தது! காலையில் ‘நாம்—தமிழர்’ சொன்ன கருத்துக்களில் மண்ணை அள்ளிப்போட்டார் பெரியார்! அந்தக் கருத்துக்களின் அடிவேரை அறுக்க ஆரம்பித்தார்!

அவர் பேசிய பேச்சையும் நாம்-தமிழர் இயக்கத்தையும் அடுத்தடுத்துக் கவனித்து வந்தால் மாநாட்டின் கேலிக்குரிய காட்சிகள் நம்முன்னே தோற்றமெடுக்கும்.

* * *

காட்சி—1

சினிமா நடிகர் ‘புலித்தேவன்’ சகாதேவன் நாம்-தமிழர் இயக்கத்தின் கொடியை ஏற்றிவைத்தார், காலையில்!

பெரியார் அவர்கள் இந்நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும்-என்பது பற்றி இரவில் பேசும்போது அவருடைய கோபம் மூவேந்தர்களின் பேரில் திரும்பியது-

“இந்த நாட்டை சேரன், சோழன், பாண்டியன் எல்லாம் ஆண்டான்களே, அவன் எல்லாம் மடையன்கள்; சுயநலக்காரன்கள்!”

ஆம்; அந்த சுயநலக்காரர்களின் கொடியைத்தான் — புலி, வில், கயல் பொறித்த கொடியைத்தான், நாம்-தமிழர் இயக்கத்தார் ஏற்றிவைத்து, துதிபாடி வணங்கினார்கள், காலையில்!

பெரியார் நாம்—தமிழர் இயக்கத்தின் மூலவேரை வெட்டியெறிந்த காட்சி இது!

காட்சி—2

அந்த நாம்-தமிழர் மாநாட்டில் இரண்டு மாநாடுகள் நடந்தன. ஒன்று — முத்தமிழ் மாநாடு — இன்னொன்று—சுதந்திரத் தமிழ் நாடு மாநாடு.

முத்தமிழ் மாநாட்டில் தமிழின் பெருமை பற்றிப் பலர் பேசினர். முத்தமிழின் பெருமை பாடினர். தொல்காப்பியம் போல் ஒரு நூலுண்டா—என்று முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் கேட்டார்.

இரவு பேசின பெரியார் “தொல்காப்பியம் ஒரு நூலா? அதிலே ஆயிரக்கணக்கான ஓட்டைகள் உண்டு!” — என்று ஒரு போடு போட்டார்; மாநாடே கிடுகிடுத்தது.

(பெரியார் இப்படிச் செய்து விடுவார் என்று தெரிந்தோ என்னவோ கி. ஆ. பெ. விசுவநாதம் பெரியார் பேசத் தொடங்கு முன்னர் மாநாட்டை விட்டே போய் விட்டார்!)

காலையில் பேசியவர்களின் வாயில் நடமாடியது குறள். திருக்குறள் முனுசாமி, குறள் ஒரு உலக நூல் என விளக்கம் தந்து பேசினர்.

“ஆனல், இரவில் பேசிய பெரியார் திருக்குறள் தான் என்ன? அதைக்கூட நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம்தான் எடுத்துக் கொள்ள முடியும். திருக்குறள் முனுசாமியின் முகத்திற்காக ஐம்பது ஒத்துக் கொள்ளலாம்!” —என்று தம் பூகம்பப் பேச்சைத் துவங்கினர்!

நாம்—தமிழர்கள் நட்ட தலையை நிமிர்த்தவில்லை, திருக்குறளார் உட்பட!

காட்சி -3

சட்ட சபையைப்பற்றி தனக்கே உரித்தான பாணியில் விளக்கம் தந்தார், பெரியார்!

“தேர்தலுக்கு ஆயிரமாயிரமாய் செலவழிக்காமல் யார் வர முடியும்? அப்படிச் செலவு செய்துவிட்டு எவனவது யோக்கியனய் இருப்பானு; இருந்திருக்கிருனு?” —என்று உரத்த குரலில் கேட்டார், பெரியார்.

நாம்-தமிழர் இயக்கத்துத் தலைவர் ஆதித்தன்—எம். எல். ஏ.—வின் உள்ளத்தில் ‘ நறுக்’ கென்று அது தைத்ததோ என்னவோ ஆதித்தன் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். பழைய பார்லிமெண்ட் அங்கத்தினரான திருக்குறள் முனுசாமியும், ‘ஆதித்தன் பணியில்’ பங்கெடுத்துக் கொண்டார்.

காட்சி—4

அடுத்து சுதந்திர முழக்கம் செய்தவர்களைப் பற்றிப் பேசும்போது “யார் முதலில் நாட்டு மக்களுக்கு நாடு சொந்தமாக வேண்டும் என்று கூறியது? நாம்தான்! எவனெவனே முதல் முழக்கம் செய்தான் என்று கூறுகிருர்கள். அது பொய். அவனவனுக்குத்தான் சண்டை போட்டுக் கொண்டார்கள்.” — என்று கனல் கக்கப் பேசினர், பெரியார்!

ஆனல் காலையில்தான் கட்டபொம்மனுக்கு முன்பு ‘முதல் முழக்கம் செய்த புலித்தேவன்’ என்ற பெயரை பட்டமாகக் கொண்ட நடிகர்—நாம்-தமிழர் இயக்கத்து நடிகர் கொடியேற்றினர்!

முதல் முழக்கம் செய்ததையே பேச்சால் தவிடுபொடியாக்கி விட்ட பெரியாரின் பேச்சை அந்த நடிகர் கேட்டாரோ என்னவோ?—கேட்டிருந்தால் ‘இது என்ன நம்ப நாம் — தமிழர் இயக்க மேடையா?’ — என்று சந்தேகப்பட்டிருப்பார், பாவம்!

காட்சி-5

“நாட்டில் மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தது யார்? நாம் தான்.”—என்று அழுத்தம் திருத்தமாக நாம்—தமிழரையும் உள்ளடக்கிக் கூறினர் பெரியார்.

ஆனல் காலையில் — முத்தமிழ் மாநாட்டில் பேச எழுந்த சினிமா நடிகர் நரசிம்மபாரதி அடக்க ஒடுக்கமாக நடந்து வந்து, ஆதித்தனின் காலைத் தொட்டு, பணிவாகக் கும்பிட்டு, கண்களில் ஒத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்!

இவருடைய ‘ஆதித்தர் பக்தி அனுஷ்டானத்தை’ நினைவில் வைத்துக் கொண்டவர்களின் எண்ணத்தையே இரவில் வெட்டி முறித்து விடுகிருர் பெரியார்!

காட்சி-6

தமிழ்நாடு நீங்கலாக மற்ற திராவிடப் பகுதிகளையும் எரிக்கலாம்—என்ற கருத்தை ஆதரித்துப் பேசி வந்த திராவிடர் கழகத் தலைவர் பெரியார் உணர்ச்சி வசப்பட்டு தம் போராட்டத்தின் ஒரு பயங்கர அங்கமாம் காந்தி சிலையை உடைப்பது பற்றிப் பேசும்போது, ‘காந்தி ஒரு துரோகி. அவர் சுதந்திரமா வாங்கித் தந்தார்? அடிமை நிலையைத்தான் வாங்கித் தந்தார்!’ என உணர்ச்சி வயப்பட்டுப் பேசினர்.

ஆனல், நாம்—தமிழர் இயக்கத் தலைவர் ஆதித்தனின் பத்திரிகையாம் ‘தினத்தந்தி’ சுதந்திர தின இதழ் போடுகிறது — அசோக சக்கரத்தை சின்னமாக வைத்துக் கொள்கிறது — கடற்கரையிலுள்ள காந்தி சிலையை இன்னும் நன்ருகச் செய்து வைக்கவேண்டுமென்கிறது.

இதைப் பெரியார் அறியாதவரல்ல; இருந்தும் ஏனே சிலையை உடைக்க வேண்டுமென்கிருர்; சுதந்திரமா நமக்குக் கிடைத்திருப்பது என்று கேட்கிருர், ‘தினத்தந்தி’யின் சூத்திரதாரியான ஆதித்தன் முன்பு!

காட்சி—7

“இந்தி ஒழிக — என்று முதன் முதல் கூறியது யார்? நாம்தான்! வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக

[தொடர்ச்சிப் பக்கம்—8]

கலப்படம்

‘நாம’மல்ல! பட்டை நாமம்!!

* கலைகள் பிறந்து வளர்ந்து பருவமெய்திய பூமி!

* கலையை ரசிப்பவர்கள் அங்கிங்கெனுதபடி எங்கெங்கும் பரவிக்கிடக்கும் மாநிலம்!

* கிழக்காசியாவிலேயே பெரிய படப்பிடிப்பு நிலையத்தைத் தன்னகத்தே கொண்ட தென்னகம்!

* இந்தியத் துணைக் கண்டத்திலேயே படத்தயாரிப்பில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கும் தென்னிந்திய தீபகற்பம்!

—இத்தனை பெருமைகளை நினைவில் வைத்துக்கொண்டல்ல; உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடிவெடுத்தார்கள், இந்திய அரசினர்!

தென்னகத்திலிருந்து அடிக்கடி கிளம்பும் ‘தென்னுட்டைப் புறக்கணித்து விட்டீர்கள்’—எனும் நியாயமான ‘குறை’யை நிறைவு படுத்தத்தான் அந்தக் கச்சா பிலிம் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடிவெடுத்தார்கள்!

“குறை பேசியவர்களே!

“கச்சாபிலிம் தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டமிட்ட இந்திய அரசினரின் சமநோக்கை— நியாயமான கண்ணேட்டத்தைப் பாரீர்; பாரீர்!

“பொதுமக்களே!

“தெற்கு தேய்கிறது; வடக்கு வாழ்கிறது—எனப் பேசுவோரின் பேச்சை நம்பாதீர்கள்.

“உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறோம்; இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன உருப்படியாகச்செய்தார்கள்? நீங்கள் அவர்கள் பேச்சைக் கேட்கக்கூடாது; படிக்கக்கூடாது; நம்பக்கூடாது! தெற்கு வளர அரும்பாடுபடும் இந்திய அரசினரின் பிரச்சார ஏஜண்டாகிய ‘ஆனந்தவிகடன்’ எழுதிவரும் ‘தெற்கு வளர்கிறது’— என்ற கட்டுரையைப் படியுங்கள்; மனப்பாடம் செய்யுங்கள்! இரவு படுக்கப்போகும் போது ஒருமுறை அந்தக் கட்டுரையைப் பாராயணம் செய்துவிட்டுப் படுங்கள்!”

—என்று ‘பிரச்சார முரசு’ தட்டியவர்களின் நாடியை ஒடுக்கி, கீழே வீழ்த்திடும் செய்தியொன்று வந்திருக்கிறது, அண்மையில்!

ஆம்; உதகையில் ஏற்பட இருந்த கச்சா பிலிம் தொழிற்சாலைக்கு கிழக்கு ஜெர்மன் உதவியளிக்க முடியாதென்று கூறிவிட்டதால் அத்திட்டம் கைவிடப்பட்டது!!

‘தெற்கு வளர்கிறது’ — என்று ‘தில்லானு’பாடியவர்களின் முகத்திலும், அதேசி! அவமானம் படருகிறது!

14. எரிமலையில் சூரியகாந்தி!

செழியன் அடைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குத் தாமரை விரைந்தாள். கதவைத் தட்டிப் பார்த்தாள். உள்ளிருந்து எந்த பதிலும் இல்லை. வீரர்களை எச்சரிக்கையாக இருக்கச் சொல்லிவிட்டு கதவைத் திறந்தாள். உள்ளே ஒரே இருட்டு. அது என்ன அரண்மனை சிறைச்சாலையா? அல்லவே! இங்கு அரசன் வாழ்கிற இடமே சிறைச்சாலை போலிருக்கிறது. சிறைச்சாலை எப்படியிருக்கும்?

ஒரு தீப்பந்தம் கொண்டு வரச் சொல்லி தாமரை அதையெடுத்துக்கொண்டு அடிமேல் அடிவைத்து சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு உள்ளே சென்றாள். பூமியைக் குடைந்து அமைக்கப்பட்ட அந்தக் கொடிய சிறைச்சாலை சேறும் சகதியுமாக இருந்தது. குகை போன்ற அந்த அமைப்பில் சிறிது தூரம் நடந்து சென்றால்தான் கைதி இருக்குமிடத்தைக் காணலாம். அந்த இடம் இன்னும் எவ்வளவு மோசமாக இருக்குமோ? அவள் காலில் ஏதோ சர சர வென்று ஓடிற்று, தீப்பந்தத்தைக் கீழே பிடித்துப் பார்த்தாள். பெருச்சாளியொன்று கதவுப் பக்கம் பாய்ந்தது. அதற்குமேல் அவளுக்கு நடக்கவே பயமாக இருந்தது.

தன் அண்ணன் இருங்கோவேளின் மீது அவளுக்குக் கோபமும் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் எதிரிகளை இவ்வளவு கொடூரமாக நடத்தக் கூடாது என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள். எருமை மாடுகளைக் கூட போட்டுப் பூட்டி வைக்கத் தகுதியற்ற இடத்தில் ஒரு நல்ல வீரனைப் போட்டு அடைத்து வைப்பது என்பது சிறிதும் மனிதாபிமானமற்ற செயல் என்று அவள் எண்ணிக் குமுறினாள். போகப் போக பாதை குறுகிக்கொண்டேயிருந்தது. மேலிருந்து மண் சரிந்து திடீரென அந்த சிறைச்சாலை தூர்ந்து போனாலும் போகக்கூடும்.

அதைக் கற்பனை செய்ததும் ஒரு பெருந்திகில் அவளுக்கு நெஞ்சிலே 'சுள்' என்று தீயைக் கொளுத்தி வைத்தது. அப்படியே நின்று தன்னை அமைதிப் படுத்திக்கொண்டு வெளிச்சத்தை எதிரே பிடித்துப் பார்த்தாள். செழியன் இருக்கிறான்; எங்கும் ஓடிவிடவில்லை. அந்த ஆறுதல் ஏற்பட்டது அவளுக்கு! அவன் உயிரோடு இருக்கிறானா? உற்றுப் பார்த்தாள். மூச்சு இருக்கிறது. ஆனால் அவன் பிரக்ஞையற்றுக் கிடக்கிறான். தொட்டுப் பார்த்தாள் அவன் நெற்றியையும் கால்களையும். ஜில்லிட்டுப் போய்விடவில்லை. சூடு இருக்கிறது. தன் பின்னால் வந்த வீரர்களைக் கூப்பிட்டு, "ஓடிப்போய் சீக்கிரம் தண்ணீரும்—கஞ்சியும்கொண்டு வாருங்கள்!" என்று கட்டளையிட்டாள். அந்த இடத்தில் மூச்சு விட்டு இழுக்க அவளுக்குத் திணறலாயிருந்தது. அவன் எப்படித்தான் சகித்துக் கொண்டானோ என்று வருந்தினாள். பெண்ணுள்ளத்தின் இயல்பான கருணை பகை உணர்ச்சியின் எல்லைக் கோட்டைத் துளைத்துக்கொண்டு புறப்பட்டது.

அவனருகே அமர்ந்து அவன் முகத்தை மெதுவாக அசைத்துப் பார்த்தாள். சாகவில்லையென்பது தவிர அவன் படுத்திருந்த காட்சி, பிணம் ஒன்று கிடத்தப்பட்டது போலவே இருந்தது. அவன் பெற்றோர்கள் இந்தக் கொடுமையைப் பார்த்தால் என்ன பாடு படுவார்கள் என்று நினைத்துக் கண்ணீர் உகுத்துவிட்டாள்.

வீரன், தண்ணீரும் கஞ்சியும் கொண்டுவந்தான். தண்ணீரை அவன் முகத்தில் தெளித்து, தலையைத்தூக்கி மெதுவாக அவனை சுவற்றோரத்தில் சாய்த்துப் படுக்கவைத்தாள். பசியின் களைப்புத்தான் அவனுக்கு என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவன் இன்னும் கண் விழிக்கவில்லை. மறுபடியும் தண்ணீரில் தன் முந்தானையை நனைத்து அதை எடுத்து அவன் முகத்தில் ஒத்திக்கொண்டேயிருந்தாள். "அம்மா! அப்பா!!" என்ற முனகல் ஒலியுடன் தலையை மெதுவாக அசைத்தான். உடனே அவள் கஞ்சியை அவன் வாயருகே நீட்டினாள். அவனால் வாயைக்கூடத் திறக்கமுடியவில்லை. கஞ்சிக்கிண்ணத்தை வாயிலே திணித்து "கொஞ்சம் குடியுங்கள்! கொஞ்சம்! கொஞ்சம்!" என்று பிடிவாதப்படுத்திக் குடிக்கவைத்தாள். தன் நினைவு இல்லாமலே செழியன் அதைக் குடித்தான். கஞ்சி, அவன் வயிற்றுக்குள் போய் விழும் சப்தத்தை அவளால் கேட்கமுடிந்தது.

"அய்யோ! பாவம் — காய்ந்து கிடந்திருக்கிறது வயிறு. ஏனப்பா வீரர்களே! காலாகாலத்தில் ஆகாரமாவது கொடுக்கக் கூடாதா?" என்று தாமரை கோபத்தோடு கேட்ட கேள்விக்கு வீரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

மிக அக்கரையுடன் கஞ்சி முழுவதையும் செழியன் சாப்பிடுமாறு செய்துவிட்டாள் தாமரை. கஞ்சி குடித்த களைப்பில் செழியன் மேலும் மயக்கமானான். மறுபடியும் மயக்கம் தெளிவிக்கும் வேலையில் அவள் ஈடுபட்டாள்.

நீண்ட நேரத்திற்குப்பிறகு செழியன் கண்களைத் திறந்து பார்த்தான். இருண்ட குகையில் ஒளியைக் கண்டதும் அவனுக்குக் கண்கள் பூத்துவிட்டன. அவனையுமறியாமல் "ஒளி! ஒளி! ஒளி!" என்று கத்தினான். பரக்கப்பரக்க விழித்தான். கண்களை அகலத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். தான் காண்பது என்ன கனவா? — கேள்வி குதித்தது. கண்களை கசக்கிவிட்டுக்கொண்டு மீண்டும் நோக்கினான். அவன் எங்கும் போய்விடவில்லை, இங்கு தான் இருக்கிறான். பகைவர்களின் சகதி நிறைந்த சிறைக் கோட்டத்தில்தான் இருக்கிறான். அதில் ஒன்றும் குழப்பமில்லை; சந்தேகமில்லை. நிச்சயமான உண்மைதான்! தெளிவான நிலைமைதான்! பெருமூச்சு விட்டவாறு தாமரையைப் பார்த்தான். அவனது பார்வையில் எத்தனையோ பொருள்கள் மறைந்து கிடந்தன. அவளுக்கு விளங்கியதெல்லாம் ஒரே அர்த்தம்தான். "இப்படி சித்திரவதை செய்கிறீர்களே; செய்யலாமா?" என்று அவன் அவளைப் பார்த்துக் கேட்பது போலிருந்தது.

"எப்படியிருக்கிறது; இப்போது?" என்று இரக்கம் தோய்ந்த குரலில் கேட்டாள்.

"மிகவும் சுகமாக இருக்கிறது ஆகா — எவ்வளவு குளிர்ச்சியான சிறைச்சாலை! சந்தனக் குழம்பை ஊற்றியதுபோல் தரை. மந்தமாருதம் வீசுவதற்கேற்றவாறு பலகணிகள். மூக்கைத் துளைக்கும் மல்லிகை மணம். எனக்கு இங்கென்ன குறை? நாகலோகம் இருப்பதாகக் கதை எழுதினானே அவன்கூட இப்படி இடத்தைத் தன் கற்பனை வளத்தால் படைத்திட முடியாது!" என்று ஏகடியமாகப் பதில் கூறினான் செழியன்.

தன் அண்ணனின் பெருமையை இழிவு படுத்துவது போன்ற வார்த்தைகளைத் தாமரையால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. ஆனாலும், சோர்ந்து போய்க் கிடப்பவனிடம் மேலும் மனம் புண்படும்படியாகப் பதில் கூறுவது கூடாது என்று பேசாதிருந்து விட்டாள்.

செழியனுக்கோ அவளிடம் இன்னும் பேச வேண்டும் என்பது போன்ற உணர்ச்சி. அவள் மட்டும் அங்கேயே உட்கார்ந்திருப்பதாகக் கூறிவிட்டால் இதை விடப் பாழான இடத்தில்கூட அவன் அடைபட்டுக் கிடக்கத் தயார். அவளை யாரென்று தெரிந்து கொள்ள வேண்டுமே? பகைவன் வீட்டில் அவள் இருக்கக் காரணம் என்ன? இருங்கோவேளுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு? எல்லா சந்தேகங்களையும் போக்கிக் கொள்ளவேண்டுமென்ற ஆவல் அந்த நெருக்கடியான இடத்திலும் அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

"உன்னோடு சிறிது நேரம் நான் தனியாகப் பேச வேண்டும்! அனுமதி கிடைக்குமா?" என்று கொஞ்சும் தோரணையில் கேட்டான்.

முதலில் ஒரு தடவை அவனிடம் பேச்சுக் கொடுக்காமலே சமாளித்துக் கொண்டு போயிருக்கிறாள் அவள். ஆனாலும் இப்போது செழியனின் வேண்டுகோளை வெளிப்படையாக அவளால் புறக்கணிக்க முடியவில்லை.

"என்னோடு தனியாகப் பேசுவதற்கு என்ன இருக்கிறது? பேசுங்கள், பேசுங்கள் என்று அரசர் கேட்கும் போது பேச மறுக்கிறீர்கள். இப்போது என்ன பேச்சு?" என்று கடுமையாகப் பதில் கூறினாள் தாமரை.

"இல்லை! அரசனிடம் பேச வேண்டியதைத்தான் உன்னிடம் பேச விரும்புகிறேன். இந்தப்

பேச்சு அரசனுக்கும் பயன்படும்." என்று விளக்கமுரைத்த செழியனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு தாமரை, வீரர்களை சைகை செய்து வாசலிலே போய் நிற்கச் சொன்னாள். அவர்களும் தீப்பந்தத்தை அங்கேயே சேற்றில் சொருகி நிற்க வைத்துவிட்டு வாயிற் பக்கம் போய் எச்சரிக்கையுடன் காவல் நின்று கொண்டார்கள்.

"ம்! என்ன பேசவேண்டும்—பேசுங்கள் சீக்கிரம்!" என்று கேட்டாள் தாமரை.

"நான் மாத்திரம் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கமாட்டேன். நீயும் என் கேள்விகளுக்கு சில விளக்கங்கள் தர வேண்டும்" என்றான் செழியன்.

"மிக நன்றாயிருக்கிறதே! எதிரி நாட்டு வீரருக்கு எங்களைப் பற்றிய விளக்கங்களைத் தந்து நாங்கள் ஏமாந்து போக வேண்டுமோ?"

"அப்படிப்பட்ட செய்திகள் எனக்கொன்றும் தேவையில்லை. அது போன்ற உண்மைகள் எனக்குக் கிடைத்தாலும் அவை எப்படி இங்கிருந்து வெளியே செல்ல முடியும்? நீங்கள்தான் என் பிணத்தைக்கூட வெளியே போடமாட்டீர்களே! ஒருவேளை பிணத்தை வெளியே போட்டு, நாய் நரி, கழுகு ஏதாவது என் உடலைக் கீறி இருதயத்தை எடுத்துக்கொண்டு போய் பாண்டி மண்டலத்திலோ சோழ மண்டலத்திலோ போட்டுவிட்டால் என் இருதயம் பாண்டிய சோழ மண்டலங்களுக்குச் சொந்தம் என்ற உண்மை நிலைபெற்றுவிட்டால் என்ன செய்வது? தவறிப்போய் ஒரு காக்கை என் நாக்கைக் கொண்டுபோய் சோழர் எதிரில், பாண்டியர் எதிரில் போட்டு, உடனே என் நாக்கு புராணத்தில் வரும் நாக்கு போல பேச ஆரம்பித்து உங்களைப் பற்றிய உண்மைகளைச் சொன்னாலும் சொல்லிவிடக்கூடும். இல்லையா? அதனால் என் சவத்தையும் இங்கேதான் எரித்துப் பொசுக்குவார்கள். அதற்குள் சில உண்மைகளைத் தெரிந்து கொண்டு தற்காலிகமாக மகிழ்வு கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். இந்தச் சிறு மகிழ்ச்சியையாவது நான் அடைவதில் தடையொன்றும் இல்லையே!"

—அவன் பேச்சைக் கேட்கக் கேட்க தாமரையின் உள்ளம் உருக ஆரம்பித்தது. சாவைப் பற்றிய ஒரு நிச்சயத்துடன் இருக்கும் அவன் முகத்தில் அச்சத்தின் சாயல் அணுவளவும் தென்படாத ஒரு ஒளி வீசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவள் வியந்தாள்.

"நீங்கள் என்னிடம் எதைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?" என்று அன்பு குழைந்த தொனியில் கேட்டாள்.

"என்னைப் பற்றி ஒரு கதை சொல்கிறேன், கேள் முதலில்" என்று ஆரம்பித்தான். "ஒரு நாள் எனது மன்னவர் பாண்டியன் பெருவழுதி என்னையழைத்து ஒரு அழகிய பெண்ணின் படத்தைக் காட்டி 'இவள்தான் உனக்கு மனைவியாக வரப் போகிறவள்' என்று கூறினார். படத்தைப் பார்த்த நான் எந்த மறுப்பும் கூறவில்லை. என் சம்மதத்தைப் புரிந்து கொண்டார். பிறகு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளால் திருமணம் நடைபெறுமல் போய்விட்டது. அந்தப் படத்தில் நான் கண்ட அழகியை இதுநாள் வரையில் தேடிக்கொண்டேயிருந்தேன். கிடைக்கவில்லை."

"அதற்கென்ன? இந்தக் கதை கேட்கவா என்னை உட்காரவைத்தீர்கள்?"

"கொஞ்சம் பொறு! தேடிக்கொண்டிருந்த சமயத்தில்தான் சோழ பாண்டியர் நட்பு ஒப்பந்தம் நடைபெற்றது. அந்த விழாவின்போது ஏற்பட்ட நிகழ்ச்சியால் எனக்கு இந்த முடிவு ஏற்பட்டது!"

"அதெல்லாம்தான் தெரியுமே—அதற்கென்ன?"

"நான் வாழவேண்டும்—வளமாக வாழவேண்டும் — இன்பமாக வாழவேண்டும் — என்று நினைத்து — எப்போது திருமணம் வரும்? என்று ஏங்கிக் கிடந்த சமயம் அந்தச் சித்திரத்துப் பாவை என் கண்ணில் படவில்லை. அவளோடு காதல் மொழி பேசி இல்லறக் களிநடனம் புரிய வேண்டுமென்று நான் ஆயிரமாயிரம் மனக்கோட்டைகளைக் கட்டியலைந்தபோது அந்தப் பேசும் புறா என் விழி வலையில் விழவில்லை.

"என்னுயிரே-பொன்விளக்கே-மண்ணுலகில் இல்லாத பேரழகே! மாற்றுக் குறையாத தங்கமே! என்றெல்லாம் அவளைப் புகழ்ந்து பாடிப் பாடி எழுதி, அந்த ஓலைச் சுவடிகளை அடுக்கி அடுக்கி அவைகளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, 'இத்தனையும் என் காதலி பற்றிய காவியம்' என்று கூத்தாடிக் குடும்பம் நடத்த நான் கனவு கண்டபோது அவளை நான் காண முடியவில்லை. சாவு, 'வா வா! என்று கைகாட்டி என்னை அழைக்கும்போது, சாவூருக்குப் போகும் வழியில் என் சந்தனச் சிலையைக் காணுகிறேன். கண்ணீர் வடிக்கிறேன்!"

"அவளைக் கண்டீர்களா?....... எங்கே?...யார் அவள்?...."

"ஆமாம் கண்டேன். அன்றலர்ந்த செந்தாமரை முகம். ஆணிப்பொன் மேனி. அழகெலாம் ஒருசேர வடித்தெடுத்த வண்ணச்சிலை. மீன் என்பார் கண்ணை—இல்லை; தேன் மொள்ளும் வண்டு படுத்திருக்கும் அல்லி மலர் என்பேன்! இதழ் என்பார் அதரத்தை—இல்லை; திறந்திருக்கும் குங்குமச் சிமிழ் என்பேன்! அந்த ஆரணங்கைக் கண்டு விட்டேன். எழிலோவியத்தைக் கண்டு விட்டேன்!"

"எங்கே? யாரை?" — தாமரை கோபமாகக் கேட்டாள்.

"இங்கேதான்! நீதான்! நீயேதான நான் தேடியலைந்த நீலோற்பலம்! நித்திலம்! நிலவு!"

தாமரைக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அப்படியே சிலையாக மாறிப் போனாள். அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று அவளுக்குத் தெரியவில்லை. அவன் மனம் புண்படும்படி பேசக்கூடாது என்று மட்டும் அவள் முதலிலேயே முடிவு செய்திருந்தாள். அவன் தன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்தை நினைத்து அவள் ஆத்திரப்படவில்லை. தன் அழகை வியக்கவும், தன்மீது விருப்பமுறவும் — அவனுக்கு உரிமையிருக்கிறது. அதைத் தடுக்க அவளால் எப்படி முடியும்? எந்தப் பெண்ணைப் பார்த்ததும் அவளிடம் ஒரு ஆண்மகன் தன் உள்ளத்தைப் பறிகொடுப்பது தவறில்லை. தன் கருத்தை அவளிடம் வெளியிடுவதிலும் தவறில்லை. இந்த நிலைமை எதுவரையில் போகலாம்—எதுவரையில் சரியாக இருக்கலாம் என்பதே பிரச்சினை. "உன்னை நான் உயிரினும் மேலாக நேசிக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்!" என்று கேட்கிறவரையில் தவறு இல்லை. நிச்சயமாகத் தவறு இல்லை. அவன் மொழி கேட்ட அந்தப் பாவையும் ஒப்புதல் உரை தந்துவிட்டால் பிறகு பேச்சே இல்லை. அவள் அவனை விரும்பாமல் மறுத்துவிட்ட பிறகும் அவன் தவறான வழியிலேயே அவளிடம் நடந்து கொள்ள முயலுவானேயானால், அங்கேதான் மனிதன், மிருகமாக மாறுகிறான். அந்த மிருகம் தண்டிக்கப்பட்டே தீர வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு கருத்து தாமரையை அவன்மீது அனுதாபம் காட்டச் செய்தது. சோழனுக்கும் இருங்கோவேளுக்கும் பகை மூளாமல் இருந்தபோது, பாண்டியனும் இருங்கோவேளுங்கூட நண்பர்களாகத்தான் இருந்தார்கள்.

அந்த நேரத்தில் தன் படத்தை இருங்கோவேள் பாண்டிய மன்னரிடம் அனுப்பியிருக்கக்கூடும். அந்தப் படத்தைக் கண்ட செழியன் தன்மீது காதல் கொண்டிருக்கக்கூடும். அவன் பேச்சினைக் காணும்போது அந்தக் காதல் தூய்மையான காதலாகவே தோன்றுகிறது. அதே சமயம் பயமும் ஏற்படுகிறது. செழியன், காதல் கதை பேசி இவளை ஏமாற்றிவிட்டு ஓடித் தப்பிவிடலாம் என்றும் திட்டமிட்டிருக்கலாம் அல்லவா?

இப்படியெல்லாம் குழப்பங்கள் தாமரையைக் கௌவிக் கொண்டன. அவன் முகத்தை முறித்துப் பேசிவிடக்கூடாது என்ற முடிவுடன், "நான் யார் என்று தெரிந்தால் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள்!" என்றாள்.

அதற்கு செழியன் பதில் பேசவில்லை. அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு எதிர்பார்த்தான்.

"நான் இருங்கோவேள் மன்னரின் தங்கை!" என்று அவள் பெருமிதமாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டு செழியன் திணறிப் போனான்.

எரிமலை மீது சூரியகாந்திப் பூ எப்படி மலரும் என்று அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

"யாராயிருந்தால் என்ன — காதல், பகையை நோக்குவதில்லை!" என்று அவன் பதில் கூறியிருந்தால் அவன் தன்னை ஏமாற்றுவதற்கே இந்தத் திட்டம் வகுத்து காதல் நாடகம் ஆடுகிறான் என்று தீர்மானித்திருப்பாள் தாமரை.

எதிரியின் தங்கை எனக்கேட்டு அவன் தவிப்பதைக் கண்டதும் அவன் உண்மையிலேயே முதலில் தன்னை நேசித்திருக்கிறான் என்று கண்டுகொண்டாள் அவள்.

"நான் சொன்னது காதில் விழவில்லையா? இருங்கோவேள் மன்னரின் தங்கைதான் இந்தத் தாமரை!" என்று அழுத்தந்திருத்தமாக மீண்டும் சொன்னாள்.

"நீ ஏன் இந்தக் குடும்பத்தில் வந்து பிறந்தாய்?" என்று வேதனை பீறிட்டெழக் கத்திவிட்டான் செழியன்.

அவன் கத்தியது அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது. சிறைச்சாலையின் கதவுப்பக்கம் ஏதோ ஓசை கேட்கவே திரும்பிப் பார்த்தாள். வீரன் ஓடிவந்து "அரசர் வருகிறார்" என்றான். தாமரை வாயிற்புறத்தையே பார்த்துக்கொண்டு மெல்ல முன்னோக்கி வந்தாள். இருங்கோவேள் அந்தச் சேற்றிலும் சகதியிலும் கால்வைத்து வேகமாக உள்ளே வந்துகொண்டிருந்தான்.

(தொடரும்)

★ செப்டம்பர் 15! ★

தென்னகத்தார்,

சிந்தை-அணு-ஒவ்வொன்றும் செயல் மணக்கச் செய்திட்ட தலைவர்-இருட்டறையில் ஒளிவிளக்கு ஏற்றி வைத்த எழுத்து வேந்தர் — விடுதலை விடிவெள்ளி-எழுச்சி முரசம்-

எங்கள் அண்ணா

50-ம் ஆண்டு

பொன்விழா மலர்

உங்கள் கரங்களை அழகு படுத்தும்

★ 'முரசொலி' வெளியிட்ட எந்த மலரும் ஏமாற்றம் தந்ததில்லை!

★ ஈடு இணையற்ற முயற்சியே முரசொலியின் தனிப்பண்பு!

★ அண்ணா பொன்விழா மலரை எத்துணை எழிலோடு முரசொலி வழங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

★ மலர்பற்றி உங்கள் எண்ணங்களை வெளியிடுங்கள்.

ஒரு ரூபாய் விலையில்...

உயர்ந்த முறையில்...மலர் வருகிறது!

விற்பனையாளர்கள் தேவையான பிரதிகளுக்கு இப்போதே எழுதவும்.

நாணயம் குறைந்தது; நாணய மதிப்பும் பாழானது!

பன்னிரெண்டு ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் பல்விழுந்த கிழவனைப்போல் தள்ளாடுகிறதே நிர்வாகம்—என்று படுகுழி நோக்கி விழுகின்ற பாரத சர்க்காரை நோக்கிக் குற்றச்சாட்டுகள் பறக்கின்றன, தொகையற்று! அரியணை மீதிருப்போர் பொம்மை ராஜாக்களாக போலித் துரைத்தனம் நடத்தி வரும் கொடுமையைக் கண்டு சாவோர் எண்ணற்றோர்!

ஆனால், எமைத் தடுப்போர் எவருமிலர் என்று மார்தட்டும் மகாத்மாவின் சீடர்களோ 'உற்பத்திப் பெருக்க'த்தின் பட்டியலைக் காட்டத் தவறுவதில்லை; நிர்வாகத்தின் இலட்சணத்தால் நிமிர்ந்துவிட்டது நாட்டு நிலை என்று மாபெரும் பொய்யைச் சொல்லவும் பின் வாங்குவதில்லை!

'உற்பத்திப் பெருக்கம்' என்கிறார்களே; எதில் என்று கேட்கிறீர்களா?

கரம்பு நிலத்தை எல்லாம் கழனியாக்கி உற்பத்தியின் எல்லையை உயர்த்திக் காட்டினார்களா? இல்லை!

ஆலைகள் ஆயிரத்தை எங்கெங்கும் கட்டி, 'வானத்தை எட்டுகின்ற புகையைப் போல் புகையாகிவிட்டது காணீர், இந்த நாட்டு ஏழ்மைத்தனம்' என்று தொழில் உற்பத்தியைப் பெருக்கிக் காட்டினார்களா? இல்லை!

ஆனால் உற்பத்தி பெருகித்தான்விட்டது என்று புள்ளி விபரம் காட்டுகிறார்கள். அதாவது வெள்ளைத் தாளைத் துண்டு துண்டாக்கி—அச்சேற்றி-கலர்த் தாளாக்கி—"இதோ பெருக்கி விட்டோம் கரன்சி நோட்டுக்களை" என்று புன்முறுவல் செய்கிறார்கள்.

1954—55 ல் சர்க்கார் வெளியிட்ட ரூபாய் நோட்டுகளின் மதிப்பு 1,920 கோடி ரூபாய்!

1957—58ல் 2,930 கோடி ரூபாய்!

இந்த ஆண்டு ஜூன் மாதம் முடிய உள்ள நிதி நிலைமைப்படி 2,536 கோடி ரூபாயைக் கரன்சி நோட்டுகளாக வெளியேற்றியிருக்கிறது சர்க்கார்!

இவ்விதம் நாளுக்கு நாள் கோடிக்கணக்கிலே நோட்டுகளை அச்சடிப்பதால் என்ன லாபம்? அவைகளைக் கண்ட நேரத்தில் இங்கே ஆட்டம்போடும் 'வறுமைப் பேய்' ஓடிவிடுகிறதா? அல்லது நோட்டுகளைத் தின்று பசியைத் தணிக்கும் புதிய கலை ஏதாவது கற்றிருக்கிறார்களா, இந்த நாட்டு மக்கள்? நினைவுக்கு ஒவ்வாத இத்தகைய விளைவுகள் எதுவும் நிகழாது. கற்பனை செய்து பார்க்கும்போதே திகிலடையச் செய்யும் விபரீத விளைவு ஒன்று இன்று ஏற்பட்டுவிட்டது!

இந்த உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக இன்று உலக அரங்கில் இந்தியக் கரன்சியின் மதிப்பு குறைகிறது—என்ற திடுக்கிடும் செய்தி கிடைக்கிறது. ஜப்பானில் இந்திய ஒரு ரூபாய் நாணயத்தின் மதிப்பு. இப்போது ஒன்றரை ரூபாய்க்குச் சமமாக மதிக்கப்படுகிறதாம்!

வேறெந்த நாட்டு நாணயத்திற்கும் இந்த மதிப்புக் குறைவு ஏற்படவில்லையாம். பொருளாதார விற்பன்னர்கள் இந்த வீழ்ச்சியைக்கண்டு திகைப்படைகிறார்கள். ஆர். கே. சண்முகம், டாக்டர் மத்தாய், சிந்தாமன் தேஷ்முக், டி. டி. கிருஷ்ணமாச்சாரி — போன்ற பொருளாதார மேதைகளாலேயே தீர்க்கமுடியாத இந்தப் பிரச்சினையை, மொரார்ஜி தேசாய் எப்படித்தான் சமாளிக்கப்போகிறாரோ என்ற அதிர்ச்சி எங்கும் பரவுகிறது.

இந்தச் சீர்குலைவு, இந்தியப் பொருளாதாரத்தில் வெளிநாடுகளுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதையே காட்டுகிறது!

ஏட்டளவில் திட்டங்களைப் பிர்மாண்டமாகத் தீட்டுகிறார்கள்; அவைகளை நிறைவேற்ற பணம் கோடிக் கணக்கிலே தேவைப்படுகிறது; அந்தத் தேவையை நிறைவேற்ற அச்சடிக்கும் அரசாங்க இயந்திரங்கள் இரவு பகலாக இயங்குகின்றன!

ஒருபுறம் நோட்டுகளின் உற்பத்தி பெருகி வருகிறது; அதே நேரத்தில் அதற்கு ஈடாக பொருள் உற்பத்தி அதிகரிப்பதில்லை; ஆகவே பணமிருந்தாலும் பொருட்கள் குறைவாகக் கிடைக்கின்றன!

இந்தப் பணப்பெருக்கத்தால் ஏற்படுகிற மாபெரும் பொருளாதாரச் சீரழிவு இதுவரை உள்நாட்டோடு நின்றது; இப்போது வெளிநாடுகளிலும் இந்திய ரூபாயின் மதிப்பைப் பாழாக்கிவிடுகிறது!

அந்தோ கொடுமை; நாணயம் குறைந்தவர்களின் ஆட்சியில் நாணயத்தின் மதிப்பும் குறைகிறது!

கலப்படம்...

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

என்று ஒலி கிளப்பியது யார்? நாம்தான்!"—என்று தம் முப்பது வருட அனுபவத்தை வைத்து பெரியார் அவர்கள் பேசினார்.

பெரியார் அந்த அனுபவப் பட்டுக் கொண்டிருக்கும்போது எதிர்க்கட்சியின் அணைப்பிலிருந்த ஆதித்தன், பெரியாரின் இப்பேச்சைக் கேட்டவுடன் மனது சஞ்சலத்தில் ஆழ்ந்ததாலோ என்னவோ, பக்கத்திலிருப்பவரிடம் முனகினார். ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டுதான் ஆதித்தன் முனகுகிறார்—என்பதை அறிந்த பெரியார், தன் பேச்சை நிறுத்திக் கொண்டு ஆதித்தனை நோக்கி 'என்னங்க?' — என்று கேட்டார்.

அந்த மூது கிழவரின் கம்பீரமான குரலுக்குப் பதிலளிக்க முடியவில்லை ஆதித்தனால்! 'இது நாம்-தமிழர் மேடை. கண்டதையெல்லாம்—உங்கள் கதையெல்லாம் கூறுதீர்கள்!'—என்று கூறிடத் துணிவில்லையோ என்னவோ, 'ஒன்றுமில்லையே!' என்று பதிலளித்தார் பெரியாருக்கு! பெரியார் பேச்சைத் தொடர்ந்தார்!

காட்சி—8

பெரியார் எதையோ பேசினால், நாம்-தமிழர் இயக்கமும், அதன் பேச்சாளர்களும் அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லையே—என்று பேசாதபடி அவர்களின் வாயிற்கும் பூட்டிட்டு விட்டார், பெரியார்.

'நான்தான் ஆதித்தன்; ஆதித்தன் தான் நான்'—என்று கடைசியில் பெரியார் கூற, ஆதித்தனும் அதை ஒத்துக் கொண்டார்!

ஆனால் பொது மக்களுக்குத்தான் ஒரே குழப்பம். பெரியார் எப்படி ஆதித்தன் நிலைக்கு இறங்க முடியும்?

பெரியார் விடுதலையணிக்குத் தலைமை தாங்கும்போது அரசியல் கட்சிக் கிளைகளில் தாவிக் கொண்டிருந்த ஆதித்தன், எப்படி பெரியார் ஆவார்?

காங்கிரசாயிருந்து, பிரஜா கட்சியில் புகுந்து, பேரூர் மாநாட்டில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு நேரில் வாழ்த்தைத் தெரிவித்து, லோகியா சோஷலிஸ்டாக மாறி, நாம்-தமிழர் நிலையில் தற்காலிகமாக நிற்கும் ஆதித்தன், பெரியாராக முடியுமா?

—இக் கேள்விகள் எழுகின்ற பொது மக்களின் மனதில் மற்றொரு சந்தேகமும் ஏற்படுகிறது.

ஏன் பெரியார் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்?

வேட்டு ஒன்று வெடிக்க.—அதைக் கண்டு மேடையில் தலைவர்களுடன் உலாவிக் கொண்டிருந்த பெரியாரின் அன்பிற்குரிய நாய் நடுங்க—மேடையின் மேலிருந்து ஜிகினாத்துகள்கள் பொன் மழையென விழ — இத்தகைய ஆடம்பர மாநாட்டில் கலந்து கொண்டு அவர் இப்படி நாம்—தமிழர் கருத்துக்களுக்கு வேட்டு வைத்தது ஏன் — எனவும் மக்கள் எண்ணுகிறார்கள்.

நமக்குள்ளேயே நாம்-தமிழர்—எனக் கூறிக் கொள்ளும் அந்த இயக்கத்தார் செலவிலே நடத்தப்படும் அவர்களின் மாநாட்டிலேயே—அவர்கள் ஒவ்வொரு கொள்கைக்கும் வேட்டு வைத்துத் தகர்ப்பதுதான் பெரியாரின் ராஜதந்திரமாக இருக்குமோ—என ஐயப்படுகிறார்கள் மக்கள்!

மரம் தந்த கோடரியாலேயே மரத்தை வெட்டும் பெரியாரின் ராஜதந்திரம் (நாம் — தமிழர் இயக்கத்தைப் பொறுத்தவரை) வாழ்க! வாழ்க!

நூலேணி

இந்திதான் ஆட்சி மொழி!

ஆசிரியர்: ஏ. கலைமுகிலன்

பொய்யர்கள் டமாரம் அடிக்க, புரட்டர்கள் சங்கு சேகண்டி முழக்க, துப்பாக்கியும் கைவிலங்கும் துணைக்கு வர இந்தி ஆதிபத்யம் ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது, இத்துணைக் கண்டத்திலே!

அந்த 'ஊர்வல'த்தைத்தடுத்து நிறுத்தும் பணியில் தன்னையும் ஒரு கருவியாக்கிக் கொள்கிறது, 'இந்திதான் ஆட்சிமொழி' — எனும் ஏடு.

இந்தி மொழிக்கு ஆட்சிமொழியாகும் தகுதி உண்டா?—என்பதைப் பகுதி பகுதியாக ஆராய்கிறது, இந்நூல். கேர்—என்பவரின் தலைமையில் இயங்கிய ஆட்சி மொழிக்குழு இந்தியைத்திணிக்க முயற்சித்ததை அழகுற எடுத்துக் காட்டி, 'இந்தி இலக்கண வளம் நிறைந்த மொழி அல்ல'—எனக் கூறிய ஜகஜீவன்ராமையும், 'இந்தி மிகச் சிலருடைய தாய் மொழி'—எனக்கூறிய ராஜேந்திர பிரசாத்தையும் சாட்சிக் கூண்டிலே நிறுத்திவைத்து அழகுற இந்தியின் கீழ்த்தரத்தை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

பெருவாரியான மக்கள் பேசுவது இந்திதான் எனும் வாதத்தின இருமருங்கிலும் உள்ள ஓட்டைகளை அவர் சுட்டிக் காட்டும் பாணியே அலாதியாக இருக்கிறது.

குறவா மொழி பேசுவோர் எத்தனை என்று கணக்கெடுத்துக் கூறும் விதத்தையும், ஆனால் இதுவரை இந்திக்கு யாரும் அப்படிக் கணக்கெடுத்துக் கூறவில்லை—என்ற மறைக்கப்பட்ட உண்மையைக் கூறி, இந்தி வெறியர்களின் புரட்டை வெளிப்படுத்துகிறார்.

81 பிரிவுகள் கொண்டிருக்கும்,கதை இதுதான் இந்திஎனக் கூறுவதில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கும் நிலை—இவையெல்லாம் கூறி, இந்த இழி மொழியா நம் ஆட்சி மொழி எனக் கேட்டு அந்த ஆதிக்க மொழியின் இடுப்பொடித்துப் போடும் பணிக்கு அழைக்கிறார் ஆசிரியர்.

இந்நூலில், கழகக் கொடியில் 'இந்திதான் ஆட்சிமொழி'—எனப் போட்டிருப்பது சிலரைத் திகைக்க வைக்கிறது. எனினும், பாராட்டப்பட வேண்டிய நல்ல நூல் இது!

[கிடைக்குமிடம்: எம். எம். லிங்கம் பதிப்பகம், சென்னை—1. விலை; 25 காசு; பக்கங்கள்: 30]

ஒருபக்கக்கதை

அப்போதுதான் பகல் உணவிற்குப் பின் படுத்த நான் தூங்கியெழுந்து முகம் கழுவுவதற்காக மாடியறையின் ஜன்னல் கதவைத் திறந்தேன். 'சலாம் மகாராஜ்!' என்று வானத்திலிருந்து வந்த ஒலி கேட்டு என உடம்பெல்லாம் சிலிர்த்துவிட்டது.

என்னுடன் பேசியது அசரீரியா? அருபமா?

திரும்பிப் பார்த்தேன்; என்னை வணங்கியது வேறு யாருமல்ல; பனைமரம் அளவு உயர்ந்த கம்பத்தின் உச்சியில் மார்பை வைத்துப் படுத்தவாறு வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த கழைக் கூத்தாடிதான், மரணவாயிலை மிதித்தவாறே அலட்சியத்தோடு எனக்கு மகாராஜா பட்டம் வழங்கியிருக்கிறான்.

சற்று குனிந்து பார்த்தேன். அவனது ஐந்து வயதுக் குழந்தை அவனை ஆர்வத்தோடு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது. பாவம்; அந்தக் குழந்தை இப்படிப்பட்ட அனுபவப் பள்ளியில்தான் குலத் தொழிலைக் கற்றுக் கொள்ள முடிகிறது!

கைகள் மட்டும் உணர்ச்சியற்று கொட்டுமேளம் ஒன்றைத் தட்டி, 'பூம்பூம்' என்ற ஒலி எழுப்ப; பச்சிளங் குழந்தையொன்று முதுகிலே கட்டப்பட்ட தொட்டிலில் தூங்க; இன்னொரு குழந்தை கருப்பைக்குள்ளே வளர, அந்தப் பெண்—அவன் மனைவி—தன் அத்தானைப் பார்த்தவாறு, கழுத்திலே தொங்கும் தாலி நிலைக்குமா, நிலைக்காதா—என்பதை நிர்ணயிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்!

சொக்காயை மாட்டியவாறு தெருவுக்கு நடந்தேன், நான்!

நாற்பது ஐம்பது பேர் அந்தக் கழைக்கூத்தாடியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரின் முகத்திலும் ஆனந்தம்—ஆச்சரியம்--தவிப்பு!

ஆனால் என்னால் மட்டும் அதை சிறிதும் ரசிக்கமுடியவில்லை. ஈளைகட்டி இருமல் முற்றி சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே பெருமூச்சு விட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கும் நோயாளியின் மரணவேதனையைப் பார்ப்பதற்கும், ஆபத்தோடு போராடிக் கொண்டிருக்கும் அவனைப் பார்ப்பதற்கும் எனக்கு வித்யாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்போது எழுந்த கையொலி என் சிந்தனையைக் கலைத்தது. ஒவ்வொருவரிடமாகக் கை நீட்டிவிட்டு இறுதியில் அவன் என்னிடத்தில் வந்தான்.

"ஏனப்பா; இப்படி ஒரு அபாயத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கிறாயே—உனக்கு ஏதாவது ஒன்று நேர்ந்துவிட்டால் உன் மனைவி மக்கள் கதி என்னவது?" —ஒரு எட்டணா நாணயத்தை நீட்டியவாறே அவனிடம் கேட்டேன்.

"என்னங்க செய்றது? எல்லாம் இந்தச் சாண் வயத்துக்குத்தான்! அதுமட்டும் இல்லேன்னா ஏங்க இப்புடி உசுருக்குத் துணிஞ்சி வரப்போறேன்?" — விழிகள் நன்றி கூற அவன் நகர்ந்தான்.

பாவம்; வயிற்றுக்காக மனிதன் என்னென்ன கஷ்டப்படுகிறான்? எவ்வளவு பெரிய ஆபத்துகளையெல்லாம் எதிர்நோக்குகிறான்!

—இந்த நினைப்பில் எப்படி அவ்வளவு நேரம் அந்தப் பூங்காவில் இருந்தேனோ தெரியவில்லை.

"சார்...ஒரு காலணா கொடுங்க சார்!...வயத்துப்பசி கிள்ளுது சார்! கொஞ்சம் கருணை காட்டுங்க சார்!" — பிச்சைக்காரனின் குரல் என் நினைவைக் கலைத்தது!

வாலிபமான வயது; எவ்வளவு உழைப்பையும் தருவதற்குத் தயாராக இருக்கும் உடல்!

"இந்த வயதில் பிச்சையெடுக்கிறாயே? — உனக்கு வெட்கமாயில்லை? ஏதாவது கௌரவமான வேலை செய்து பிழைத்தால் என்ன?"—கோபத்தோடு கேட்டேன் நான்?

"என்ன சார் செய்றது எனக்கு மட்டும் தன்மானம் இல்லாமயா இருக்கு? வயறு ஒன்னு இருக்கே சார்! வேற வேலை கிடைக்கிற வரைக்கும் என்ன சார் செய்றது?"

அவன் பதில் என் நெஞ்சை குத்திற்று. வெட்கத்தைவிட்டுப் பிச்சையெடுக்கும் இழிநிலைக்கு அவனை ஆளாக்கியது எது? வயிறு! வயிறு!! ஒருசாண் வயிறு!!!

—அப்போதுதான் என் முதுகிலே ஒரு கை பட்டுத் திரும்பினேன்!

"ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? என்னோடு வா; ஒரு வேடிக்கை காட்டுகிறேன்!" — என்று சிரித்தவாறே அழைத்தான், இன்ஸ்பெக்டராக இருக்கும் என் நண்பன் தியாகு!

நான் அவனது 'ஜீப்'பில் ஏறிக்கொள்ள; எங்களுக்கு முன்னால் போலீஸ் 'வேன்' போய்க்கொண்டிருந்தது.

திடீரென்று எங்கள் இரு மோட்டார்களும் ஒரு இருட்டுச் சந்தில் இருந்த வீட்டில் நின்றன.

சில வினாடிகள் நான் மட்டும் தனியாக 'ஜீப்'பில் உட்கார்ந்திருந்தேன் என்ன நடக்கப் போகிறதோ — என்ற வியப்போடு!

பிறகு அந்தப் போலீஸ் பட்டாளம் சில பெண்களை 'வேனில்' ஏற்றியது. தியாகுவும் வெற்றிச் சிரிப்போடு என பக்கத்தில் அமர்ந்து காரை ஓட்டினான்.

"என்னப்பா இதெல்லாம்?"

"விபச்சாரம் செய்தவர்கள். கைது செய்துகொண்டு போகிறோம்!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன யோசிக்கிறாய்? இவர்களும் மற்றவர்களைப் போல பெண்கள்தானே; மானத்தை விட்டு இவர்கள் ஏன் உயிரினும் மேலான கற்பை காசுக்கு விற்கிறார்கள் — என்றெல்லாம் உன் எழுத்தாளன் மனம் கேட்கச் சொல்லுகிறதா? இது உனக்குப் புரியாத உலகம். எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்காகத்தானப்பா!"

—நான் பதில் பேசவில்லை கார் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு சாண் வயிற்றினால் எவ்வளவு போராட்டங்கள்? மனிதப் பிறவிகளுக்கு மட்டும் வயிறு என்னும ஒரு அங்கமே இல்லாதிருந்து; பசி என்கிற உணர்ச்சியே எழாமல் இருந்தால்?

—மேஜை மேல் காலை நீட்டியவாறே யோசனையில் ஈடுபட்டேன்.

"ஏய், இதெல்லாம் என்ன யோசனை? சாப்பாட்டு ருசி தெரியாவிட்டால் வாழ்க்கையில் வேறு இன்பம் ஏதப்பா? ஒன்று விளக்கை அணைத்து விட்டுப் படு. அல்லது வெளியே போ!" —என்று போர்வையை இழுத்து முகத்தை மூடியவாறே முனகினான், என் 'ரூம் மேட்' மோகன்!

நான் பேசாமல் விளக்கை அணைத்தேன். சிந்தனையில் கற்பனை ஒளி பிரகாசமடைந்தது.

★

ஆமாம்! உலகத்தில் மனிதனாகப் பிறந்தவர்கள் அத்தனை பேருக்கும் வயிற்றுப் பசி என்கிற உணர்ச்சியே இன்னதென்று தெரியாது! சாப்பாடு என்றால் என்னவென்று கேட்கிறார்கள்!

—அப்படிப்பட்ட கற்பனை உலகத்திற்குள் நான் நுழைந்தேன்.

'சபாஷ்! ஒரு சாண் வயிறு ஒழிந்தது. உலகத்தில் தொல்லைகள் ஒழிந்தன. மனிதனை மிருகமாக்கிய முக்கியமான உணர்ச்சி ஒழிந்தது!'—இப்படி நினைத்தவாறே நான் தெருவில் நடந்தேன்.

'பூம் பூம்'—என்ற ஒலி—நான் முன்பு எங்கேயோ கேட்ட ஒலி—என் காதுக்கருகில் ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன். என்ன விந்தை! நான் முன்பு பார்த்த அதே கழைக்கூத்தாடி இப்போதும் கம்பத்திற்கு உச்சியில் ஆடிக் கொண்டிருந்தான்.

மீண்டும் 'சார்' என்ற ஒலி. திருப்பினேன். அதே பிச்சைக்கார வாலிபன்!

'சர்' என்ற ஜீப் ஒலி; இன்ஸ்பெக்டர் தியாகு என்னைப் பார்த்து கையை ஆட்டிக் கொண்டே செல்ல; காருக்குப் பின்னால் சென்ற 'வேனி'ல் அதே பெண்கள்!

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. வயிற்றை நிரப்புவதற்காகத்தான் முன்பு ஒரு உயிர் பணயம் வைத்து அபாயத்தின் உச்சியில் ஊசலாடிற்று! ஒரு உயிர் வெட்கததைவிட்டுப்பிச்சையெடுத்தது! ஒரு உயிர் மானத்தைச் சந்தையிலே விற்றது.

இப்போது வயிறு இல்லாத வேளையில் அவர்கள் மீண்டும் பழையபடியே கஷ்டப்படவேண்டியதின் காரணம்?

"இன்னுமா தெரியவில்லை! மனிதனுக்கு வயிற்றுப்பசி மட்டும் தான் பிரதானமா?

"உணவு, உடை, இருக்கை — இவைகளில் முதலாவதுதானே ஒழிந்தது; மற்ற இரண்டும்? அதனால் அவன் இன்னும் கம்பத்தின் மீது ஆடுகிறான்; இன்னொருவன் பிச்சை எடுக்கிறான்."

"அப்படியானால் அந்தப்பெண்களும் அதற்காகத்தான் விபச்சாரம் செய்கிறார்களா?"

"அதற்குமட்டுமல்ல. உணவுப் பசி ஒழிந்தது உண்மைதான். ஆனால் உல்லாசப்பசி? வயிற்றுப் பசி ஒழிந்தது; ஆனால் உணாவுப் பசி? வயிறு அழிந்ததும் நாடி நரம்புகள் தலையெடுத்துவிட்டன. சாப்பாடு தேடி உழைதது அலைந்தவர்கள் இன்று சுகம் தேடி அலைகிறார்கள். அதனால்தான் அந்தப் பெண்கள் கூடடம் இன்னும் வ்பச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறது! ஒரு சாண் வயிறு ஒழிந்தால் எல்லாவிதத்திலும் குழப்பம் தான், நண்பனே!"

—பேசியது வேறு யாருமல்ல; என் மனசாட்சிதான்.

"டேய், இன்னும் தூங்கவில்லையா, ஒரு சாண் வயிறு இல்லாவிட்டால் யாருக்கும் நன்மை கிடையாது, 'அப்பென்டிசிட்டிஸ்' போன்ற வியாதியஸ்தர்களைத் தவிர! பேசாமல் தூங்கடா!"— என்று ஊளையிட்டான் மோகன். நானும் படுப்பதற்கு எழுந்தேன். ∴

அழிவுகாலத்தின் துணைவர்கள்!

பூமிதான இயக்கத்தலைவர் வினோபாவின் அந்தரங்க சீடர்களைப்போல் காட்சியளிப்பவர்கள் காங்கிரசார்தான்!

'பூமிதானக் கூட்டுறவுப் பண்ணைகள் நாட்டிற்கோர் ஒளி விளக்கு; வழிகாட்டும் உதாரணங்கள்!' — என்று பூமிதானப் பிரச்சாரகர்கள் கூவும்போது, 'ஆம்; உண்மை; காந்தி சீடர் வினோபாவின் திட்டமல்லவா?' எனப் பேசுவார்கள். முடிவில் காங்கிரசே, பூமிதான இயக்கம்; பூமிதான இயக்கமே காங்கிரஸ் —என்று ஆக்கிவைத்திருந்தார்கள்.

கடைசியில், "கிராமதானப் பண்ணைகள் மூலம் எந்தவிதப் பயனையும் அடையமுடியவில்லை"—என்று நிஜலிங்கப்பா குழு அறிவித்துவிட்டது; உருப்படாத—உதவாக்கரைத் திட்டம் போடுவோர் என்ற பட்டத்தையும் அவர்களுக்கு அளித்துவிட்டது! கூட இருந்தே துரோகம் புரிந்துவிட்டது!

சுழல் விளக்கு

மாலுமி

தி. ராஜகோபால்; லால்குடி.

(?) இந்தி எண்களை மைல் கற்களில் இடுவதை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாது—என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கர்ஜனை புரிந்துள்ளாராமே; இதனால் விளையப் போவது என்ன?

' டில்லித் தேவதை'களுக்கு இவர் வெளியிட்ட எதிர்ப்புப் பெருமூச்சு தெரிந்தால் போதும். அவ்வளவுதான்; அடுத்த கணம் இவர் பதவியிலிருந்து நெட்டித் தள்ளப்படுவார்—இல்லையென்றால் 'நான் அப்படிப்பேசவில்லை; தப்பித் தவறிப் பேசியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்'—என்று மன்னிப்புக் கேட்டுக் கொள்வார், டில்லி மூலவர்களிடம்!

டி. வடிவேல்; சாத்தூர்.

(?) கேரளத்தில் 'கம்யூனிஸ்ட் அரசாங்க ஒழிப்பு இயக்கம்' நடத்திய மன்னத்து பத்மநாபன் இந்தியாவிலிருந்தே கம்யூனிசத்தை விரட்டப்போவதாகக் கூறியிருக்கிறாரே?

தான் தலைவராயிருந்த ஒரு சாதிச் சங்கத்தைக் கலைத்து விட்டதாக அறிவித்துவிட்ட அவருக்கு வேறு வேலை வேண்டுமே; இப்படி இந்த 'சத்' காரியத்திலிறங்கினாலாவது நேருபிரான் பார்வை தன்மீது திரும்பாதா; அவருடைய கருணைப் பார்வையோடு ஒரு 'பதவித் துண்டும்' கிட்டாதா என்ற ஆசையாக இருக்கலாம்!

பி. பாலு, செயங்கொண்டான்.

(?) சிறுமீனைப் பெருமீன் விழுங்கும்—என்ற தத்துவத்தின் உற்பத்தி இடம் எது?

காங்கிரஸ்தான்! காங்கிரஸ் இயக்க வரலாற்றிலே அது விழுங்கி ஏப்பமிட்ட மாற்றுக் கட்சிகள் அதிகமாகும். தேர்தல் காலத்தில் எதிர்த்துக் குரலெழுப்பிய இயக்கங்கள், பிறகு காங்கிரசின் வயிற்றுக்குள் ஜீரணமாகி மறைந்து விட்டிருக்கின்றனவே! சென்னையைப் பொறுத்தவரையில் உழைப்பாளர் கட்சியும் காமன்வீல் கட்சியும் இப்போது இருப்பது காங்கிரசின் வயிற்றில்தான்; சமீபத்தில் ஒரிசாவில் கணதந்திர பரிஷத் காங்கிரசால் விழுங்கப்பட்டது. அவைத் தவிர்த்து எண்ணற்ற சுயேச்சைகளை மறைத்து விட்டதும் அதே காங்கிரஸ்தான், தோழரே!

கே. சாரதி; குழிக்கரை.

(?) நேருவிடமிருந்து நீங்கள் எதிர்பார்ப்பதுதான் என்ன?

அவரது அரசியல் துறவறத்தை—அல்லது நம்முடைய திராவிடத்தை!

பி. செந்தாமரை; கோவை.

(?) பெரியாருக்கு 50,000 ரூபாய் தேவையாமே: எதற்கு?

போகிற போக்கைப் பார்த்தால் திராவிடர் கழகத்தையே நேற்று முளைத்த 'நாம்—தமிழர்' இயக்கம் விழுங்கிவிடும் போலிருக்கிறது. பணமாவது மிஞ்சட்டுமே, 'பெரியாரின் வாரிசு'களுக்கு!

பி. டி. சாமுவேல்; போடி.

(?) கோடீஸ்வரர்கள் நாள் தோறும் என்ன சாப்பிடுகிறார்கள்?

இந்திய துணைக் கண்டத்திலே வாழ்கின்ற கோடீஸ்வரர்களைக் கேட்கிறீர்களா? அவர்கள் சாப்பிடுவதெல்லாம் இந்த நாட்டு சர்க்காரின் 'நேர்மைத் திறத்தை — நீதி பரிபாலனத்தை!

"மலையான்"; சென்னை—1.

(?) "சர்க்காரின் வேகத்தைத் தடுக்கவா எதிர்க்கட்சிகள்?"—என்று காமராசர் கேட்டாராமே; அதற்கு என்ன பொருள்?

'எங்களுடைய சர்க்காருக்கு ஏது வேகம்?' — என்று கேட்பதாக இருக்கலாம்.

பி. தட்சணு; அமைந்தகரை.

(?) மற்ற மாநிலங்களைப் போலல்லாது நேருவின் பேச்சை சென்னை மாநிலப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்துவதேன்?

அது ஒரு அபூர்வமான கலை, தோழரே! தங்களை ஆளுகின்ற எசமானரின் விஷ நாக்கு உமிழ்கின்ற கேவலமான சொற்களை மூடி மறைத்து, சாதகமானவற்றை மட்டும் தம்பட்டம் அடித்துப் பறை சாற்றும் அந்தக் கலையை ஏனோ மற்ற மாநிலங்கள் கற்றிருக்கவில்லை! நேருபிரான் வீசிய 'நான்சென்ஸ்', 'காட்டுமிராண்டி', 'முட்டாள்தனம்' போன்ற சுடுசொற்களை நீங்கள் குறிப்பிட்ட அந்த ஏடுகள் எப்போதாவது வெளியிட்டுப் பார்த்திருக்கிறீர்களா?

கே. உஸ்மான்; நீடாமங்கலம்.

(?) நிதியமைச்சர் சுப்பிரமணியம் பேசுகிறபோது மற்றவர்கள் சிரிக்கிறார்களா?

ஆமாம்; சிரிக்கிறார்கள்—ஆனால் அந்தப்பேச்சிலே நகைச்சுவை கிடையாது! எனினும்,

* காமராசர் தலைமையின்கீழ் உள்ள அமைச்சரும் பேசுகிறாரே என்று சிரிப்பவர்கள்—
* ஒரு அமைச்சர் இப்படியும் பேசுகிறாரே என்று சிரிப்பவர்கள்—
* நமது அமைச்சர், முகத்தைக் கவனிக்கிறாரே என்கிற காரணத்தால் 'அசட்டுத்தனமாக' சிரிப்பவர்கள்;

—இப்படிப் பல ரகம் உண்டு.

கே. செல்வம்; அம்பத்தூர்.

(?) கேரளா இப்போது எப்படி இருக்கிறது?

அமைதியாக இருக்கிறது; அதாவது பிணம் வேகின்ற மயானத்து அமைதி!

அ. சங்கரசுப்பு; தாத்தாங்குடி.

(?) இலங்கையில் ஒரு காஷ்மீரி கொல்லப்பட்டிருந்தால்...?

'சேது பாலம்' கட்டப்பட்டிருக்கும்; முப்படையும் இலங்கையை முற்றுகையிட்டிருக்கும்; அந்தத்தீவைப் பொசுக்க 'அனுமார்'கள் அவதரித்திருப்பார்கள்; 'நவீன இராமாயணமே' நடைபெற்றிருக்கும்! ஏனென்றால் நேரு ஒரு காஷ்மீரியல்லவா?

கமலக்கண்ணன்; சென்னை—5

(?) பைத்தியம் பிடிக்க என்ன செய்ய வேண்டும்?

தொடர்ந்து பத்து நாட்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணனின் பேச்சுக்களைப் படித்துக் கொண்டு வரவேண்டும்!

பரசுராமன்; சத்தியமங்கலம்.

(?) கள்ளமார்க்கெட்டுக்காரர்களைக் கழுவிலேற்றுவாரா, நேரு?

ஏற்றுவார்; ஆனால் தேர்தல்களே இல்லாமல் இருக்க வேண்டும்!

சி. தங்கராசன்; கரூர்.

(?) சில பத்திரிகைகள் நடத்தும் நாடகப் போட்டிக்கு நாடகங்களே வருவதில்லையாமே?

'அம்மாமி'களுக்குப் பிடித்த மாதிரி எழுதி அடுப்பங்கரை இலக்கியமாகத் தங்கள் நாடகங்கள் ஆகிவிடக்கூடாதே என எழுத்துலகம் கருதுவதால்தான், அந்தப் பத்திரிகைகள் போட்டியில் கலந்துகொள்ள வருபவர்கள் உண்டோ எனக் கைபிடித்து இழுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டன!

சி. பெரியப்பன்; கோயில்வழி.

(?) சென்னை சென்டிரல் ரயில்வே ஸ்டேஷன் அபிவிருத்திக்காக ஒரு கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறதாமே டில்லி அரசு?

ஆமாம்; இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தென்னகத்தில் ஒரு அங்குலம் கூட இரயில் பாதை போடாத கொலை பாதகத்தை இந்த ஒரு கோடி ரூபாயால் கழுவி விட்டுவிடப் பார்க்கிறார்கள். சும்மா கிடந்த காங்கிரஸ் பிரச்சாரப் பீரங்கிகளுக்கு அடுத்த தேர்தல் வரை சொல்வதற்கான 'விஷயதானம்' ஒன்றும் இதனால் கிடைத்துவிட்டது!

1—9—59-ல் வெளிவருகிறது!

செங்கதிர்

(ஆசிரியர்: ஆரா)

இலக்கியக் கட்டுரைகள் — சிறுகதைகள் — திரைச் செய்திகள் — மற்றும் "அன்புள்ள அண்ணாவுக்கு" "சங்கப் பலகை" முதலிய புதிய பகுதிகள்!

விலை 13 காசுகள்

[முன்பணம் கட்டும் விற்பனையாளர் எழுதுக.]

"செங்கதிர்", 69, சாமிப்பிள்ளை தெரு, சென்னை—7.

சென்னையில் தி. மு. க. மாநாடு

9—8—59 ஞாயிறு காலை 10-மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் கூடிய சென்னை மாவட்ட தி. மு. க. குழுக்கூட்டத்தில் "சென்னை மாவட்ட தி. மு. க. 3வது மாநா"ட்டை அக்டோபர் திங்களில் நடத்துவதென்றும், தோழர். கோ. செங்குட்டுவன் அவர்கள் வரவேற்புக்குழுத் தலைவராகவும், தோழர்கள், கே. எம். கண்ணபிரான், இளஞ்சேரலாதன் ஆகியோர் மாநாட்டு செயலாளர்களாகவும், தோழர். அ. பொ. அரசு (சென்னை மேயர்) பொருளாளராகவும், தோழர். தி. சு. நல்லதம்பி அவர்கள் தொண்டர் படைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பசி, பிணி...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

றித்தான் சென்னை அரசின் முதலமைச்சர் பேசியிருக்கிறார், ஆகாஷ்வர்ணி எனும் வானொலியில்!

'பசியும், பிணியும், பகையும் இல்லாமலிருப்பதே ஒரு நாட்டிற்குரிய இலக்கணம் என்று நம்முடைய சான்றோர்கள் கூறினார்கள்...!"

பசியில்லாத நாடுதான் நாடு—என்கிறார், அமைச்சர்!

ஆனால், பசியால் பரதவித்துச் சாவோர்—பட்டினியின் கோரத் தாண்டவத்தால் பிள்ளைக்கனியமுதை விலை கூறி விற்போர்—பானையில் அரிசி இல்லையெனத் தெரிந்து தண்ணீர் உண்டே வாழ்வு நடத்தும் 'மானமுள்ள' பட்டினிக் குடும்பங்கள் — மாலை நேரத்தில் மட்டுமே அரசிப் பருக்கையைக் காணுகின்ற குழி விழுந்த கண்கள்; லட்சோப லட்சம் அவர் ஆளும் நாட்டிலே!

பிணியில்லாத நாடுதான் நாடு—என்கிறார்.

ஆனால், இன்ன நோய் எனத் தெரியாது கன்னபுர மாரியம்மையை நினைத்தழுது சாவோர்,—'இடமில்லை போ!'—எனக் கூறும் மருத்துவ மனைகளின மதிற் சுவர்களிலே மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கிய வண்ணம் சாய்ந்து நிற்போர்—தொத்துநோய்ப் பருவம் வந்தால் பழுத்த பனங்குலையில் பனம்பழம் விழுவதுபோல சாவின் அணைப்பிலே விழுந்து சுடுகாட்டுப் பயணம் நடத்துவோர்; ஆயிரமாயிரம், அவர் ஆளும் நாட்டிலே!

பகையில்லாத நாடுதான் நாடு—என்கிறார்.

ஆனால்—அரசியல் பகையால் வாழ்விழந்தோர், சாதி சமயப் பகையால் — தேர்தல் பகையால் 'முதுகுளத்தூர் சம்பவ'ங்களால் உயிரிழந்தோர் ஆயிரமாயிரம் உண்டு, அவர் ஆளும் நாட்டிலே!

நாட்டிற்கு இலக்கணம் கூறியவரே! உங்கள் ஆக்கினை சக்கரம் உருளும் இந்நாட்டிலே அந்த இலக்கணம் செயல்படுகிறதா?

இல்லையென்றால் இது நாடா? இல்லை—கடும் புலி ஆளும் காடா?

—அடியார்